[illegible]

ஜோதி 2 மலர் 2

டிசம்பர். 1931

188779

306 Regd. No. M. 2573.

2-வது ஆண்டு 1931ஸு ஜனவரி மீ

பாலவித்யா

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

பாலவித்யா ஜர்னலின் 1வது ஆண்டு சென்ற டிஸம்பர் மாதத்தோடு முடிவடைந்தது.

ஷை வருஷத்தில் *சபேசன் என்ற ஒரு பெரிய நாவலும், 2 சிறிய நாடகரூபமான நாவல்களும், மற்றும் சில சிறு கதைகளும், வியாஸங்களும் வெளிவரலாயிற்று.

1931 ஸுத்தில் இரண்டு பெரிய நாவல்களும், இதர சிறு கதைகள், வியாஸங்களும் வெளியாகும்படி ஏற்பாடு செய்திருக்கிறது.

பாலவித்யா பரந்த பல நன்னோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறதென்பதை வேண்டுகோள் என்னும் தலைப்புப் பாடலாலே நாட்டியச் சொல்லியுள்ளோம். எந்த நோக்கமும் மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றாலன்றி நாட்டிற்பரவி நன்மை பயக்கும் நிலையை அடைய முடியாது. இதனை நீவிரும் உணர்ந்தே இருப்பீர்.

ஆகவே சந்தாதாரர்கள் (V. P.ல் அனுப்பினால் 4 அணா அதிகம் செலவாகிறபடியால்) சந்தா தொகையை மணியார்டர் செய்து 2வது ஆண்டுக்கு சந்தாதாரராகச் சேர்ந்துகொள்வதுடன் தங்கள் சிநேகிதர்களையும் சந்தாதாரர்களாக சேரும்படி செய்வீராயின் நம் நாட்டுக்கு எங்களை நல்ல தொண்டராக்குதலாகிய நற் காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர். எங்கள் தொண்டும் பல் நல்வழிகளிலே பரந்து பயன் தருவதாகும்.

> " ஒன்றே செய்யவும் வேண்டும் ; ஒன்றும்
> நன்றே செய்யவும் வேண்டும்"; நன்றும்
> இன்றே செய்யவும் வேண்டும் ; இன்றும்
> இன்னே செய்யவும் வேண்டும்." (கபிலர்)

பதிப்பாளர்கள்.

---

* 2வது ஆண்டில் சேரும் சந்தாதாரர்கள் ஷை நாவலுக்கு ஆர்டர்செய்தால் தபாற்செலவு இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம். விலை ரு. 1-8-0

188779
6 MAR 1931

பால விநோதினி.

(மாதப் பத்திரிகை)

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் "
" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு "

தொகுதி II	1931ஆம் பிப்ரவரிமீ பிரமோதூதஆம் மாசிமீ	பகுதி II

ஹாஸ்ய துணுக்குகள்.

(பிரஸங்கி தொகுத்தது)

பாகவதர் :—அன்றையதினம் என் காலக்ஷேபத்தின்போது மழைமாத்திரம் வராமலிருக்குமானால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்?

நண்பன் :—வீணாக என் சொல்லுகிறீர்? வந்தவரையிலும் நாமிருவரும் சந்தோஷப்படவேண்டியதே. இல்லாவிடில் இந்த ஊருக்கு நாம் வர கௌரவப்படாது.

* * * * *

கணவன் :—நான்மாத்திரம் தங்களை மணந்துகொள்ளாதிருக்கும் பக்ஷத்தில் நீ என்னிலும் கேவலமான ஸ்திதியிலுள்ள ஒருவனைத்தானே மணந்துகொள்ளவேண்டியிருக்கும்?

மனைவி :—அந்த விஷயத்தில் நம்மிருவருக்கும் அதிகமான பொருத்தமுண்டு. தாங்களை யாரும் மணக்க சம்மதிக்கமாட்டார்கள் என்று தானே நானும் உங்களை மணந்தது.

* * * *

பிரஸங்கி:—"நாம் இப்பொழுது இருக்கும் நிலையையும் உங்களுக்குள்ள [illegible]பொவுத்தையும் வர்த்தமான [illegible]ப்ரங்களையும் நீங்கள் யோஜனை செய்யவேண்டும். ஆய்ந்தோய்ந்து பாராமல் செய்வது அநர்த்தத்[illegible]

சபையிலிருந்து சத்தம்:—இந்நேரம் யோஜனைசெய்து பார்த்தோம். இந்த காராசத்தைக் கேட்டு காதுகள் சலித்துவிட்டன. இது தான் முடிவு. நிறுத்து.

*　　*　　*　　*　　*

சாமான் வாங்கவந்தவர்:—ஐயா! உங்களைப்பற்றி வெகு ஆடம்பரமாய் விளம்பரம் செய்திருக்கிறதே. இவ்வளவு பெரிய நகரில் உங்களுக்கு இந்த மூலைதானா அகப்பட்டது? இங்கு வருவதற்கு சுமார் 100 பேரைக் கேட்டாய்விட்டது.

கடைக்காரர்:—உங்கள் அறியாமைக்கு நான் உத்திரவாதமில்லை. நீர் அப்படி பலரைக் கேட்டுக்கொண்டு வருவது ஓர் விளம்பரமன்றோ?

*　　*　　*　　*　　*

ராமு:—கடன் வாங்குவது என்றால் எனக்கென்னவோ ரொம்ப அருவருப்பாய் இருப்பதுடன் மனசுக்கும் கவலை தருவதாயிருக்கிறது.

நண்பன்:—அடே போ! நீ வாங்கும் வரையில் செய்த பசப்புகளைவிட வாங்கின பிற்பாடு இதோ அதோ என்று செய்யும் ஸாமார்த்தியத்திலும் கடைசியாய் பெருத்த நாமமும்தான் ஜெயிக்கும்.

*　　*　　*　　*　　*

இங்கும் அங்கும்.
(பிரஸங்கி திரட்டியது)

மனிதனை நல்லவனாகவும் கெட்டவனாகவும் மாற்றி அவனுடைய நிலைமையையும் மாற்றுவது வருமையும் பணப்பெருமையுமே! ஆனால் இரண்டினும் வருமையிலும் செழுமையிலும் பணமொன்றையே பிரதானமாய் பேசுகிறதுதான் மனிதனது தன்மை. இத் தன்மையை அடக்கி தன் இஷ்டப்படி நடப்பவனே மாயையை வென்றவன்.

*　　*　　*　　*　　*

6 MAR 1931

குழந்தைகளுடைய பிற்காலவாழ்க்கைக்கு இன்[illegible]தாய் இருப்பது அவர்களுக்கு ஏற்படும் சஹவாஸமும் பழக்கமுமே! ஏனெனில் "சஹவாஸம்" ஓர் மனிதனது பிற்கால வாழ்க்கைக்கு ஓர் வழிகாட்டியாய் இருப்பதுடன் அவனுடைய கௌரவத்திற்கும் தாழ்விற்கும் காரணம் என்று பலர் சாற்றுகின்றனர்.

*　　*　　*　　*　　*

ஒரு பையன் ஏதாவது தின்பண்டம் வைத்திருந்தால் அது ஒழியுமட்டும் அவன் மற்றவர்களுடன் சிநேகமில்லை. தனிமையாய் போய் விடுவான். அது முற்றிலும் ஒழிந்தபின்னர்தான் மற்றவர் நண்பர். இது சிறுவர்களின் சுவபாவம் என்கிறார் நமது பிரஸங்கி.

*　　*　　*　　*　　*

"பிறர்க்கெனவாழ்" என்பது நன்குணர்ந்த சான்றோரால் அளிக்கப்பட்ட ஓர் நன்னெறி. ஆனால் நமது பிரஸங்கியோ "ஐயா! பிறர்க்குதிலும் உதவி பிறர்பொருட்டு வாழாவிடினும், உங்களால் பிறர்க்கு ஒரு இடஞ்சலும் இல்லாமல் பார்த்துக்கொள்வீரானால் அதுவே மேலானது" என்று வேண்டிக்கொள்கிறான்.

*　　*　　*　　*　　*

ஓரகத்தில் மாமியார் அதிகப்பிரஸங்கி, பெரிய வம்புக்காரி. மருமகளோ அதைவிட ஜாஸ்தி. நாத்தியோ கேட்கவேண்டியதில்லை. இவர்களுக்குள் பூனையும் எலியும்போல் ஒற்றுமை. நடக்கிற பேச்சில் இன்னார்தான் சளைப்பர் என்று திட்டமாய் கூறுவதற்கில்லையே என்று நம் பிரஸங்கி வருந்துகிறான்.

*　　*　　*　　*　　*

முதல் மனைவி வைத்த சாம்பார் நன்றாயில்லை என்று அவளை அடித்துவிட்டு இளைய மனைவியிடம் சென்றான். அவள் சிறுநீரை கொடுத்தால்கூட சாப்பிட்டுவிடுகிறானே! ஏன்? அவள் மீதுள்ள பாசமே.

*　　*　　*　　*　　*

குழந்தை பசிக்கிறதென்று அழ, குழந்தை ஏன் அழுகிறது என்றார் தந்தை. "உங்களுக்கும் குழந்தைக்கும் வேறென்ன வேலை? குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஊரைச் சுற்றினால் வீட்டுவேலையை யார் செய்வது? இதைச் செய்ய உட்கார்ந்தால் இந்தக் குழந்தை இப்படி கேட்கிறது." என்று வெறுப்புடன் கூறி ஒருசொட்டு எச்சிலையாவது கண்களில் தடவிக்கொண்டவுடன், இளைய தாரத்தின்பேரில் ஐயாவின் ஆசை பூரா ஏற்பட்டுவிடுகிறது. முடிவு......ஆனால் அக் குழந்தையின் கதி என்ன என்றுதான் பிரஸங்கிக்கு ஸந்தேகம்.

* * * * *

மனைவி ஏதாவது சொன்னால் வந்துவிடும் பெரிய கோபமும் சண்டையும். வைப்பாட்டி "மட்டி, கழுதை, வாடா, ஏண்டா இன்னேரம்" என்றால்கூட ஹாரம் பூண்டவன்போல் ஆனந்தப்படுவதேன் என்று பிரஸங்கிக்கு ஸந்தேகமுண்டாய்விட்டது.

* * * * *

வியபசாரியும் இன்பந் தருகிறாள். பதிவிருதையான உனது பத்தினியும் இன்பந் தருகிறாள். இதில் தாரதம்யம் என்னவென்று ஒருவர் பிரசங்கியைக் கேட்டதற்கு, பிரஸங்கி "கஸ்தூரியும் விற்பனையாகிறது. மண்ணாங்கட்டியும் விற்கப்படுகிறது. இதில் உயர்வு தாழ்வு என்று கணக்கிடுபவர் சிலரே." என்றான்.

* * * * *

"அப்பா! நான் இவ்வுலகையே லக்ஷியம் செய்யாமல் உன்னத பதவியில் இருந்தேன். இப்போது ஐ. பி பூமியை பார்த்துக்கொண்டே நாணிக்கொண்டு வீதியை நொந்து நடக்கவேண்டியிருக்கிறது. இது ஏன்?" என்று ஒருவர் நமது பிரஸங்கியைக் கேட்டாராம். அதற்கு சிறிதும் தயங்காமல் பிரஸங்கி "அது ஒரு காலம், இது ஒரு காலம்" என்று விடையளித்தாராம்.

* * * * *

"விளம்பரம் செய்தலே வியாபாரத்திற் கழகு" என்ற பாடலை பிரஸங்கி வாசித்தபொழுது, "ஊரை சூறையாடி தின்பதே வயிர் வளர்ப்பதற் கழகு" என்று ஏன் ஓர் பாடல் இருக்கவில்லை என்று வருத்தப்பட்டாராம்.

5. ஆனமையாற் கந்தனென்னு நாமந் தாங்கி
யாறுமுகா வென்றழைக்கு மன்னை யான
மீனமையுங் கண்ணியினன் மிகுந்து வார்க்கு
மிகுஞானப் பாலமுத மிகவு மாந்தித்
தானமையும் பொருளான தன்மை வாய்ந்த
தடஞானக் கடலனைத்து மகத்த டைத்தே
வானமையுஞ் சோதி யருட் டாதைமார்பம்
வாகனமாக் கொண்டமர்ந்த வாலை பாலா.

6. நலஞ் சேரு ஞானத்தின் குழந்தையாகி
நமபனுமை நடுவமர்ந்து நந்தி போற்ற
மலஞ் சேரு மல்லல்வினை மாளவைக்கு
மாண்பு மிகு கயிலைவரை யுட்புகுந்து
வலஞ் சேரு மும்மூர்த்தித் தேவராரும்
வழிபட்டுத் துதிசெய்யத் தானிருந்து
பலஞ் சேரு திருவிளையாட்டாடும் பாதப்
பாலசுப் பிரமணியப் பரம னாரே.

7. செறுத் திட்ட விந்திரனை மாளவைத்துச்
செம்பொன் மக மேருவிருந் திருவினைக
ளறுத் திட்ட அன்பாள ரடிகள்போற்ற
வற்புதமாய்ச் சிற்பரமா யமரர் வேண்ட
விறுத் திட்ட விந்திரனை யினிதெழுப்பி
யிணையடிகள் பரவவைத் தின்ப மூட்டிக்
கறுத்திட்ட தகரேறிப் பிரமன் றன்னைக்
கந்தமாதனத் தடைத்த கருணை யானே.

8. பின்னொன்றைப் பொருளாகக் கொள்ளா தான
பெரும வுனையேபொருளாகக் கொள்ளும் வேதத்
தின்னொலிசே ராதியந்த முற்றுந் தானா
யிலங்குமொரு பிரணவத்தின் பொருளைச் சொல்லும்
நன்னயமில் நான்முகனை நான்கு வேத
நற்பொருளு நவையறவே நன் குணர்த்திச்
சொன்னயமும் பெறுதற்காக் குட்டிக் கட்டிச்
சொர்ந்தமிகு கந்தமலை வைத்த கோவே.

9. அடைத்தமல ரவன்செய்த படைப்பு வேலை
யன்போடு தாமியற்ற வறிந்த மாயன்
படைத்தமல ரவன்பாட்டைப் போக்க வேண்டிப்
பத்தியொடு பரசிவத்தைப் பரவி யேத்த
விடைத்தலைவன் வெள்ளிவரை விட்ட கன்று
விண்ணவர்கள் சூழவெழுந் தருளிச் சொல்ல
அடைத்தசிறை யுடைத் திட்டவைய கின்று
னனவரத முந்துதித் தடைகு வாமே,

10. அயன்முதலோ ரடைதுயரை யகற்ற வேண்டி
யளவில்லா வடல்பெற்ற சூரன் றம்பி
கயமுகனென் கொடியவனைத் தொலைக்க வெண்ணிக்
கங்காளன் றருபடைகள் கரங்க டங்க
மயலகற்று மெய்ஞ்ஞான வொள்வேற் றாங்கி
மாபெருநற் படையலவும் புடையே சூழச்
சயவிருது கூறு தாருகனுங் கிரௌஞ்சச்
சயிலமுந்தொ லைசெய்சண் முகத்தி றைனே.

11. அங்கடலை யரைக்குடுத்த வவனி தன்னி
லடல்சூர னவதரித்த வாதி கொண்டு
நங்கையுமை நாதர்தமை வேண்டிச் செய்த
நல்வேள்வித் திறமதையு மதற் குவந்து
தங்கமழு மானுடைய நாதர் தந்த
தூயவர மனைத்துவன் றுணையின் சீரும்
பங்கமகல் வியாழகுரு பரிந்து கூறப்
பண்பினொடுங் கேட் டுவந்த பால வேனே.

12. இந்திரனு தியர்தம்மை யிரட்சித் தாள
விருஞ்சுடரின் பெரும்புவி யின்னல் தீரச்
சந்திரனு தியர்தாபஞ் சார்ந்த தேவர்
சாலவுறுஞ் சிறைத்துயரஞ் சாய்க்க வேண்டி
மந்திரமா தியின்வலியு மிறையு மொவ்வா
மற்புயங்க ளுடைவீர பாகு தம்பி
தந்திரமா தியமிகுத்த சூரன் றன்பாற்
றண்ணருளிற் செலவிடுத்த செந்தி லானே. (தொடரும்)

அரையன் சந்தனு கங்கைய ணைந்துயர்
விரத மேன்மையவ் வீடுமற் றந்துபின்
பரத வக்குலப் பாவைபா லீன்றனன்
விரைசெய் மாலை விசித்திர வீரியன்

(பொ-ரை) சந்தனு மன்னவன் கங்காதேவியைப் புணர்ந்து அவள்பால் கொடிய விரதத்தை மேற்கொண்ட வீடுமனைத் தந்து, அதன் பிறகு வலைஞர் குலத்தானால் வளர்க்கப்பெற்ற பரிமள கந்தியை மணந்து அவளிடமாக மணமிகு மாலையணிந்த விசித்திரவீரியன் என்பானைப் பெற்றான். (2)

இம்பர் நீத்தா சேகிட வீடுமன்
றம்பி தன்னைத் தரைக் கரசாக்கிப்பின்
னம்பிகை யவம் பாலிகை மாதரை
வம்புண் மாலை மணம் புணர்வித்தனன்.

(பொ-ரை) பின்னர், அரசனாகிய சந்தனு இவ்வுலகை விட்டகன்றானாக, வீடுமன் தன் விரதப்படியே தன் தம்பியாகிய விசித்திரவீரியனை அரசனாக முடிசூட்டுவித்துப் பிறகு அன்னானுக்குக் காசிராசன் புத்திரிகளாகிய அம்பிகை அம்பாலிகை என்ற இரு பெண்களையும் மணம்புரிவித்தனன் (3)

வீரியன் மகவின் றுயிர் வீந்தனன்
தார மாதருந் தாதியுந் தங்குலம்
வேரறாமல் வியாச னருளினால்
பாரளிக்கப் பயந்தனர் மூவரே.

(பொ-ரை) மன்னனாகிய விசித்திரவீரியன் புத்திரப்பேறின்றி இறந்துவிட, மதிக்குலம் அவனோடு முடிவடையாவண்ணம் அவன் இரு மனைவியரும் அவர்களது தாதியுமாகிய மூவரும் அக்குலத்துக் குருவாகிய வியாச முனிவரது அருளைப்பெற்று உலக பரிபாலனத்திற்காக மூன்று மைந்தர்களைப் பெற்றனர். (4)

அம்பிகைக் குதித் தானிலா வம்பகன்
தம்பி பாண்டிளந் தையற் குதித்தனன்
பம்பு கூந்தலப் பாங்கியு மீன்றனள்
இம்பர் போற்று விதுரனை யென்பவே.

(பொ-ரை) அம்பிகையென்னும் மூத்தாளுக்கு பார்வையில்லாக் கண்களையுடைய திருதராட்டிரன் பிறந்தனன்; இளையாளாகிய அம்பாலிகையின்பால் பாண்டுவென்பான் தோன்றினான்; அடர்ந்த கூந்தலையுடைய பாங்கியாவாள் உலகம் புகழும் விதுரனைப் பெற்றாள் என்ப. (5)

கண்ணி லான்றனைக் காவல னாக்கிமெய்
வெண்ணி லாவனை யானும் விதுரனு
மெண்ணில் சேனைக்கி றையும மைச்சுமாய்
நண்ணிடப் புரிந்தா னதி மைந்தனே.

(பொ-ரை கங்கையின் மகனாகிய வீடுமன் திருதராட்டிரனை நாட்டுக்கரசராக்கி வெள்ளிய சந்திரனையொத்த மேனியுடைய பாண்டுவும் விதுரனும் முறையே அளவற்ற சேனைகளுக்கதிபதியாயும் அமைச்சனுமாயுமிருக்க வியற்றினான் (6)

மன்னன் சௌபலன் மங்கையை வேட்டனன்
றன்னு நற்றவக தூய வரத்தினாற்
கன்னனைத்தரு கன்னியு மத்திரை
தன்னை யும்மணந் தானனிப் பாண்டுவே

(பொ-ரை அரசனாகிய திருதராட்டிரன் சௌபலன் மகளாகிய சுபலை என்னும் மாதை மணம்புரிந்தான்; பாண்டுவெனுமவன் றம்பி நல்ல தவத்தையுடைய துருவாசமுனிவரது பரிசுத்தமான வரத்தின் மகிமையால் கன்னனைப் பெற்ற கன்னிகையாகிய குந்தியையும் மத்திரையென்னும் மற்றொரு மாதையும் மணமுடித்துக்கொண்டான்.(7)

பயோத ரக்கடற் பார்மக ளேங்கிட
வயோவென் றெங்கு மறநின்ற லற்றவுண்
மையோவிடச் சுபலன் மட மங்கையால்
சுயோதனன் முத னூற்றுவர் தோன்றினர்.

(பொ-ரை) அலைகளைக்கொண்ட சமுத்திரத்தை ஆடையாகவுடைய பூமாதேவியானவள் ஏங்கவும், உலகத்தில் எவ்விடத்தும் தருமம் நின்று ஐயோவென்றாற்றியழவும், உண்மையானது முறையிடவும் சுபலன் மகளாகிய சுபலையினிடத்துச் சுயோதனன் முதலாகக் கொண்ட நூறு துணைவர்களும் உதித்தனர். (8)

பிரதை பெற்ற வரத்தின் பெருமையால்
தருமன் வீமன் றனஞ்சயனும் மற்றோர்
திருவ கட்டின குலசா தேவரும்
குருகுலத்தின் கொழுந் தெனத் தோன்றினார்.

(பொ-ரை) பிரதை என்ற குந்திதேவி கன்னிப்பருவத்தில் துருவாச முனிவரிடத்தில் பெற்றிருந்த வரங்களின் பெருமையால் அவள் பால் தருமன் வீமன் தனஞ்சயன் என்ற அருச்சுனன் ஆகிய மூவரும், மத்திரையென்னும் மாதிடமாக நகுலன் சகாதேவன் ஆகிய இருவரும் குருகுலமென்னுங் கொடியின் கொழுந்தென்று சொல்லுமாறு உற்பவித்தனர். (9) (தொடரும்)

நிற்க, நாம் கூறியதுபோல் சம்பாஷித்துக்கொண்டிருந்த ருக்மணி, நடுவில் எதிரில் மாட்டப்பட்டிருந்த ஒரு கடியாரத்தைப் பார்த்ததும், அவ்வாலிபனை நோக்கி,

"சீமாச்சு! அது (ராமானுஜய்யங்கார்) வந்துவிடப் போகிறது. நீ ஆத்துக்கு போ." என்று கூறவே, சீமாச்சு, விசனத்துடன் ஒருதரம் பெருமூச்செறிந்துவிட்டு,

"ருக்கு! இப்படி திருடன்போல் நான் உன் வீட்டிற்கு வரவேண்டியிருப்பதை நினைக்க என்றால் சகிக்கமுடியவில்லை. இதற்கு எப்பொழுதுதான் விமோசனமோ தெரியவில்லை." என்று கூறியவண்ணம் எழுந்து நின்றுகொண்டு, "சரி; நான்—" என்று மேலே பேசுமுன் ராமானுஜய்யங்கார் அங்கு வந்துசேர்ந்தார். சீமாச்சுவைப் பார்த்ததும் அவருடைய முகம் கொஞ்சம் மாறியது. ஆனால் தன் வெறுப்பை உடனே மறைத்துக்கொண்டு, மிகவும் பிரியத்துடன், அவ்வாலிபனை நோக்கி,

"என்ன சீமாச்சு! சௌக்யமா?" என்று விசாரிக்கவே, சீமாச்சு,

"ஏதோ உங்களுடைய தயவில் இருக்கிறோம். சரி; நான் போய்விட்டுவருகிறேன்." என்று விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான். அவன் தலை மறைந்ததும், ராமானுஜய்யங்கார், தன் மனைவியை நோக்கி, அன்பொழுகும் குரலில்,

"ருக்மணி! நான் சொல்லுகிறேனென்று கோபித்துக் கொள்ளாதே. இந்த சீமாச்சு இவ்விதம் அடிக்கடி நான் இல்லாத சமயத்தில் இவ்வீட்டிற்கு வருவது பேச்சிற்கு இடம். பட்டாபி ஜோஸ்யர் தெரு ஜனங்களுக்கு வம்பு என்றால் போரும். ஏன்? எதிர்வீட்டு உளர்வாய் நாணு ஒருவன் போருமே." என்று கூறவே, ருக்மணியின் வதனம் சிவந்தது. ஆனால் மறுவினாடி அவளுடைய நேத்திரங்களிலிருந்து நீர் தாரைதாரையாகப் பெருகிற்று. உடனே மூக்கைச் சிந்தியவண்ணம், அவள்,

"என் அத்தை பிள்ளை கூட இவ்வீட்டிற்கு வரக்கூடாதா? சரி; அதுவும் நான் செய்த பாபம்தான்." என்று கூறிவிட்டு விசித்துவிசித்து அழுவாரம்பித்தாள். அவள் அழுவதைக் கண்டதும் நம் ராமானுஜய்யங்காருடைய கண்களிலும் நீர் தளும்பியது. அவர், ஓடிச்சென்று, ருக்மணியின் கரங்களைப் பிடித்துக்கொண்டு,

"அசடே! இதற்காக அழுவாளோ? அவன் வருவதில் எனக்கு ஆக்ஷேபணையே கிடையாது. யாராவது வம்பாடிகள் கண்டபடி பேசப்போகிறார்களே யென்று சொன்னேன். பைத்தியமே! கண்ணைத் துடைத்துக்கொள்." என்றார். அவர் 'கண்ணைத் துடைத்துக்கொள்.' என்று சொன்னாரேயொழிய அவள் துடைத்துக்கொள்ளுமுன் தன் மேல் அங்கவஸ்திரத்தினால் அவளுடைய கண்களைத் துடைத்துவிட்டு, மறுபடியும் "அசடே! இதற்காக இப்படி வருத்தப்படலாமோ?" என்று சமாதானப்படுத்தினார். ருக்மணி,

"எனக்கு அவனும் என் அத்தையும் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? அவர்கள்கூட என் வீட்டிற்கு வரக்கூடாதென்றால் நான் என்ன செய்வேன்? வம்பு பேசும் காலாடிகள் பேசிக்கொள்ளட்டுமே. நாய் குலைக்கிறதென்று நினைத்துக்கொள்வோம். ஆனால் அவன் இங்கு வருவதில் உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் சொல்லுங்கள்: இனிமேல் அவன் இங்கு வரவேண்டாமென்று இதோ சொல்லியனுப்பிவிடுகிறேன். உங்களுடைய இஷ்டத்திற்கு விரோதமாய் நான் எக்கார்யத்தையும் செய்யமாட்டேனென்பது உங்களுக்கே தெரியும்." என்றாள். உடனே நம் அய்யங்கார்,

"சரி; அந்தப் பேச்சைவிட்டுவிடு. எங்கே முதலில் கொஞ்சம் குடிக்க தீர்த்தம் கொண்டுவா." என்று சொல்லவே, ருக்மணி,

"வெறும் வயிற்றில் ஜலத்தை என் குடிக்கிறீர்கள்? ஜலியலாய்விட்டது. தீர்த்தமாடிவிட்டு சாப்பிட வாருங்களேன்." என்றாள்.

"கொஞ்ச நேரம் பொரு. வியர்வை அடங்கட்டும். முதலில் தீர்த்தம்கொண்டுவா." என்று மறுபடியும் கூறவே, ருக்மணி அன்னம்போல் நடந்துசென்று, சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் ஜலத்துடன் திரும்பிவந்தாள். இதற்குள் அவளுடைய முகத்தில் முதலில் இருந்த பிரகாசமும் மந்தஹாஸமும் திரும்பிவந்துவிட்டன. தன் நாதர் தாகசாந்தி செய்துகொண்டதும், அவருடைய சரீரத்தில் தன் சரீரம் பட நின்றுகொண்டு,

"ஆமாம்; என்ன சமாசாரம்? போலீஸார் அந்தப் பிள்ளையைப் பிடித்துவிட்டார்களோ?" என்று வினவ, அய்யங்கார்,

"இன்னும் இல்லை. ஆனால் அவன் இப்படி எவ்வளவு காலம் ஒளிந்துகொண்டிருக்கமுடியும்? சீக்கிரம் அகப்பட்டுவிடுவான்." என்று கூறிக்கொண்டே, ருக்மணியை இழுத்துத் தன் மடியில் உட்காரவைத்துக்கொண்டு, அவளுடைய சரீரத்தைத் தடவவாரம்பித்தார்.

ருக்மணி:— ஆனால் தத்காலம் அவனைப்பற்றி உங்களுக்குக் கவலை இல்லை?

ராமானுஜ:— கிடையாது. அவன் போலீஸாரிடம் மாட்டிக்கொள்ளாதவரையில் பகிரங்கமாய் வெளியில் வரமுடியாது. மாட்டிக்கொண்டுவிட்டால் இதைக் கொலையென்று ரூபிக்கமுடியாவிட்டாலும் 5, 6 வருஷங்களாவது தீட்டிவிடுவார்கள்.

ருக்மணி:— ஆமாம்; அவர்மேல் உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம்? பாவம்! அவர் உங்களை என்ன செய்தார்?

ராமானுஜ:— செய்தானா? அடேயப்பா! அவன் ஒரு பெரிய பேர்வழி; அவனுக்கு வாஸ்தவத்தில் என்னைக் கண்டால் பிடிப்பதில்லை. நான் என்னமோ அவர்களுடைய சொத்திலிருந்து கணக்கில்லாமல் கொள்ளையடிப்பதாய் அவன் நினைத்துக்கொண்டிருக்கிறான்.

ருக்மணி:—(சிரித்துக்கொண்டே தன் நாதருடைய கன்னத்தில் இடித்து) ஆமாம்; அதுவும் வாஸ்தவம்தானே.

ராமானுஜ:—(அவளை இறுகக் கட்டிக்கொண்டு) எல்லாம் உனக்காகத்தானே, ஏண்டி! நான் அப்படிச் செய்யாவிட்டால் நீ முழங்கைவரையில் தங்கவளைகள் எப்படிப் போட்டுக்கொள்ளமுடியும்? இப்படி மாதம் ஒரு 50 ரூ புடைவையை எப்படிக் கட்டிக் கிழிக்கமுடியும்?

ருக்மணி:—ஆமாம்; அவருடைய தமயன் சேதியென்ன?

ராமானுஜ:—யார்? கோபாலனா? அவனைப்பற்றி எனக்கு எப்பொழுதுமே கவலை இல்லை. நான் என்ன செய்தாலும் அவன் ஏன் என்று கேட்கமாட்டான். அதுவும் இனிமேல் அவ் வீட்டில் நான் வைத்ததுதான் சட்டம். அவர்களுடைய சொத்து முழுமையும் நம்முடையதென்றே சொல்லலாம். அடாடா! மறந்துபோய்விட்டேனே. நான் செட்டியாரிடமிருந்து இந்த வீட்டை விலைக்கு வாங்கிவிடத் தீர்மானித்துவிட்டேன்.

ருக்மணி:—(வியப்புற்று ஆவலுடன்) அதற்குப் பணம்?

ராமானுஜ:— அசடே! பணமில்லாமல் சொல்வேனா?

* * * * *

இப்பொழுது அதே பட்டாபி ஜோஸ்யர் தெருவிலிருந்த நம் ஸரஸ்வதியின் வீடு என்ன நிலைமையில் இருந்ததென்று கவனிப்போம். இதற்குள் குருஸ்வாமி சாம்பலாய்விட்டான். முதல்நாள் மாலை மாதவபுரியில் சீக்காய்க்கிடந்த தன் தங்கையைப் பார்க்கும்பொருட்டு போயிருந்த அவனுடைய தாயார் அன்று காலையில் திரும்பிவந்ததும் தன் புதல்வன் அவ்விதம் இறந்த விஷயத்தை அறிந்ததும், "ஐயோ!" என்று ஒருதரம் வீறிட்டலறினாள். மறுவினாடி வேரற்ற மரம்போல் தரையில் விழுந்து மூர்ச்சித்தவள், அரைமணி நேரத்திற்குப் பிறகு, தன் சுயநினைவை அடைந்தாள். அத்தெரு ஜனங்கள் எவ்வளவோ முயன்

றும் அவளை சமாதானப்படுத்துவது முடியாதகாரியமாய் விட்டது. "அப்பா! குருஸ்வாமி! நீ எப்படியும் நல்ல வழிக்கு வந்துவிடுவாய்; நாம் சுகப்படலாமென்று பாவி மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தேனே. அப்பா! இப்படி அடிபட்டு சாகவோ நீ வரன் வாங்கிவந்தாய்? ஹே பாழுந்தெய்வமே! உளுத்தமரம் நான் இருக்க, ஒரு குடும்பத்தை சம்ரக்ஷித்துவந்த என் குழந்தையைத்தானா நீ அபகரிக்கவேண்டும்? ஐயோ! இனி நான் என்னசெய்வேன்? எனக்கு வேறு நாதியில்லையே." என்று புலம்பிய வண்ணம் தீயில் விழுந்த புழுவைப்போல் துடித்துக்கொண்டிருந்த அவளுடைய பார்வை, எதிரில் பிரமித்து சிலைபோல் நின்றுகொண்டிருந்த தன் புதல்வி ஸரஸ்வதியின் மேல் விழவே, "அம்மா! உன்னை வைத்துக்கொண்டு நான் என்னடி செய்வேன்? பிரும்மன் உன் தலையில் என்ன எழுதியிருக்கிறானோ தெரியவில்லையே." என்று புலம்பிவிட்டு மறுபடியும் களைப்பினால் மூர்ச்சித்தாள்.

தன் தாயாருடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்டதும் ஸரஸ்வதி, "ஹே தெய்வமே! நான் எதற்காக இப்பாழும் ஜன்மம் எடுத்தேன்? என்னால் அல்லவோ என் தமயன் இவ்விதம் அநியாயமாய் அடிபட்டு இறந்தான்? என்னால் அல்லவோ நற்குணங்களுக்கெல்லாம் இருப்பிடமோவென்று நினைக்கத்தக்க ஒரு சுந்தர புருஷன், இவ்விதம் போலீஸாருக்கு பயந்து தன் பந்துஜனங்களையெல்லாம் விட்டுவிட்டு, இனி உயிருடனிருக்கும் வரையில் தைர்யத்துடன் வெளிவர வழியின்றி ஒளிந்துகொண்டிருக்கிறார்? ஐயோ! என்னால் அல்லவோ இதோ என்னைப் பெற்று வளர்த்த என் தாயார் இவ்விதம் துடிக்கிறாள்? ஹே அநாத ரக்ஷகா! இனியாகிலும் என்னால் பிறருக்குக் கவலையும் கஷ்டமுமில்லாமலிருக்க, என்னை உன்னிடம் அழைத்துக்கொள்ளமாட்டாயோ?" என்று அலறிக்கொண்டே ஓடி, தன் தாயாரை இறுகக் கட்டிக்கொண்டு, சரீரம் குலுங்க அழலானாள்.

* * * * *

இப்பொழுது சந்நியாசித் தெருவில் கங்காதரன் வீட்டில் என்ன நடக்கிறதென்று கவனிப்போம். அவ்வாலிபனுடைய தமயன் கோபலன் அவ்வீட்டின் மாடியில் பிரக்ஞையற்றவன்போல் படுத்துக்கொண்டிருந்தான். இதற்குள் அவனுடைய முகம் வாடி வெளுத்து வர்ணிக்கமுடியாத விதம் மாறிவிட்டது. அவன் இருபக்கங்களிலும் அவனுடைய இரு நண்பர்கள் உட்கார்ந்துகொண்டு அவனையே உற்றுநோக்கியவண்ணமிருந்தனர்.

நிற்க, கீழே அவனுடைய தாயார், பக்கத்திலிருந்த பலர் பலவிதங்களில் அவளைத் தேற்றியும் சிறிதும் தேறாமல், "ஐயோ! இதென்ன அநியாயம்? என் குழந்தைக்கு (கங்காதரனுக்கு) கோபமென்றால் என்னவென்று தெரியாதே. அவன் ஒருவனை அடித்தானென்பதையும் அதன் பலனாய், பாவம்! அவன் இறந்துவிட்டானென்பதையும் என்னால் நம்பமுடியவில்லையே. என் கண்மணீ! மாளிகைபோல் வீடும், கைகட்டிச் சேவகம் செய்ய ஆட்களும் உனக்கிருக்க, நீ இப்படி எவ்வளவு காலமடா ஒளிந்துகொண்டிருக்கமுடியும்? என் செல்வமே! இந்த வருஷம் உனக்கு விவாஹம் செய்துவைத்து, கண்குளிர அக்காக்ஷியைப் பார்க்கலாமென்று நம்பியிருந்தேனே. அப்பா! சாகுமுன் உன்னை நான் மறுபடியும் பார்ப்பேனோ? ஹே தெய்வமே! இதுவரையில் துக்கத்தையும் கஷ்டத்தையும் சிறிதும் அறியாத என்னை இவ்விதம் துக்க சாகரத்தில் ஆழ்த்தலாமோ? குபேரனுடன் ஒப்பிடத்தக்க ஒரு தகப்பனுக்குப் பிறந்து சிறுவயதில் எவ்வளவோ அருமையும் பெருமையுமாக வளர்க்கப்பட்டேன். பிறகு தர்மபுத்திரரே அவதாரமோவென்று நினைக்கத்தக்க ஒரு புருஷனை மணந்து சுவர்க்கத்திலும் அநுபவிக்க இயலாத பலவித சுகங்களை அநுபவித்தேன். அவர் இறந்த பிறகும் 'நமக்கு ஒன்றும் குறைவில்லை. பார்ப்போர் பொறாமைப்படத்தக்க இரு புத்திர ரத்னங்களைப் பெற்றிருக்கிறோம். அவர்களைப் பார்த்துக்கொண்டு சாகும்வரையில் சந்தோஷமாய்க் காலம் கழிக்கலாம் என்று இருந்தேன். ஹே பரமேசுவரா! ஒருகால்,

'இவள் 50 வருஷகாலம் சுகப்பட்டுவிட்டாள். இவள் சாகுமுன் துக்கமென்னவென்பதை இவளுக்குக் காட்டிவிடவேண்டும்.' என்று இப்படிச் செய்தீரோ? ஐயோ! கங்காதரா!—" என்று மேலும் புலம்பமுடியாமல் அப்படியே பக்கத்திலிருந்தவர்களின்மீது சாய்ந்துவிட்டாள்.

* * * * *

அதேதினம் மாலை 5 மணி இருக்கும்.

அச்சமயம், சப்இன்ஸ்பெக்டர் நடேசய்யர் தன் வீட்டில் ஒரு சாய்வு நாற்காலியில் சிந்தனையுடன் உட்கார்ந்துகொண்டிருந்தார். நடேசய்யருக்கு அவ்வூர் ஜனங்கள் ஏற்கனவே அய்யர் பட்டம் அளித்துவிட்டபோதிலும் நாம் சொல்லும் சமயம் அவருக்கு வயது 24தான் இருக்கும். அவருக்கு இன்னும் விவாஹமாகவில்லை. அவருடைய பெற்றோர்கள் இறந்து வெகுகாலமாய்விட்டதால் பிள்ளையார் கோயில் தெருவிலிருந்த அவருடைய வீட்டில் தற்சமயம் அவரையும் அவருடைய சமயற்காரனாகிய ராமாமிருதத்தையும் தவிர வேறு ஒருவரும் இல்லை. நடேசய்யர் வலங்தபுரியிலேயே பிறந்து வளர்ந்தவராகையால் அவருக்கு அவ்வூரில் மிகவும் மரியாதையும் செல்வாக்கும் உண்டு. அதுவுமன்றி, அவரிடம் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அவசியமான சாமர்த்தியம், சுருசுருப்பு முதலிய குணவிசேஷங்கள் பரிபூர்ணமாயிருந்ததாலும், அவருடைய மேல் அதிகாரியாகிய பராங்குசநாயுடுவால் நடத்தமுடியாத பல பெரிய கேஸ்களை அவர் மெச்சத்தக்க விதம் நடத்தியிருந்ததாலும், அவ்வூர் வாசிகள் அவரை மிகவும் புகழ்ந்து பேசுவது வழக்கம். இதைக் கண்ட பராங்குசநாயுடு எப்படியாவது நடேசய்யருக்கு வெடிவைத்துவிடவேண்டுமென்று தீர்மானித்திருந்தார். ஆனால் அது அதுவரையில் சாத்தியமில்லாமற்போய்விட்டது.

இனி நம் கதையைக் கவனிப்போம்.

நடேசய்யர் நாம் கூறியதுபோல் உட்கார்ந்துகொண்டிருக்கையில் அவருடைய சமையற்காரன் ராமாமிருதம், அவ்வறைக்குள் நுழைந்து, வணக்கத்துடன்,

"ராத்திரி சமையல் என்ன செய்யட்டும்?" என்று வினவ, நடேசய்யர்,

"சமையல் கிடக்கட்டும். நீ ஒரு சமயம் உன் தமையன் ஒருவன் சந்நியாசித் தெரு கல்யாணராமய்யருடைய வீட்டில் பரிசாரகனாயிருப்பதாகச் சொன்னாயே? அவன் இன்னும் அவ்வீட்டிலிருக்கிறானோ?" என்று வினவினார். ராமாமிருதம், வியப்புற்று, மரியாதையுடன்,

"இருக்கிறான். ஏன் என்ன வேண்டும்?" என்று கேட்கவே, நடேசய்யர்,

"ஒன்றும் இல்லை. இன்று இரவு 8மணிக்குள் எனக்கு அவனைப் பார்க்கவேண்டும்." என்றார். ராமாமிருதம்,

"இதென்ன பெரிய காரியம்? வேண்டுமானால் இதோ 10நிமிஷநேரத்திற்குள் அழைத்துக்கொண்டு வருகிறேன்." என்று கூறவே, நடேசய்யர்,

"ஆமாம். நான் வீட்டில் இல்லாத சமயத்தில் தங்கவேலு வந்தானோ?—" என்று அவர் கேட்டுக்கொண்டிருக்கையில் சுமார் 22வயதுள்ள ஒரு வாலிபன் அவ்வறைக்குள் நுழைந்து, மிகவும் மரியாதையுடன் நமஸ்கரித்து நின்றான். அவனைக் கண்டதும் நடேசய்யர், சிரித்துக்கொண்டே,

"எலே! உனக்கு ஆயுஸு 100. இப்பொழுது தான் நான் உன்னைப்பற்றி பேசிக்கொண்டிருந்தேன். சரி; நீ போன சமாசாரம் என்ன?" என்று வினவ, தங்கவேலு,

"அவள் ஏற்கனவே கம்பிநீட்டிவிட்டாள். அவர்கள் எல்லோரும், ஒரு அவசர கார்யமாக ராஜகோபாலபுரம் போவதாக பக்கத்து வீட்டிலிருப்பவர்களிடம் சொல்லிவிட்டு, இன்று காலை 8 மணி வண்டியில் போய்விட்டார்கள். இப்பொழுது அவ்வீடு காலி." என்று விடையளிக்கவே, நடேசய்யர்,

"சபாஷ்!" என்றார்.

அத்தியாயம் 6.

குருஸ்வாமி இறந்த 6வது தினம் காலை சுமார் 8 மணி இருக்கும்.

அச்சமயம், கங்காதரனுடைய தாயார் தன் சுர்பஸ்தர் ராமானுஜய்யங்காருடன் பேசிக்கொண்டிருந்தாள். நடுவில் அம்மாது,

"ராமானுஜய்யங்காரே! மறந்தேபோய்விட்டேன். நீர் தயவுசெய்து ஒரு கார்யம் செய்யவேண்டும். ஊரில் எல்லோரும் குருஸ்வாமி இறந்ததற்குக் காரணம் என் பிள்ளை கங்காதரனே யென்று நினைத்துக்கொண்டிருப்பதால், அவன் இறந்ததின்பலனாய் அக் குடும்பத்திற்கு எவ்வித கஷ்டமும் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது நம்முடைய கடமை. ஆகவே, நீர் அவனுடைய தாயாரைக் கண்டு, அவள் எதற்கும் கவலைப்படவேண்டாமென்றும், நான் அவளை கூடியசீக்கிரம் நேரில் பார்க்கிறேனென்றும் சொல்லிவிட்டுவாரும். இன்னும் அந்தப் பெண் ஸரஸ்வதியை நான் மத்தியானம் வரச்சொன்னதாகச் சொல்லும். இன்னொரு கார்யம். நாளை தினம் மங்களத்தை (கோபாலனுடைய மனைவியை) அவளுடைய பிறந்த வீட்டிற்கு அனுப்பலாமென்று உத்தேசித்திருக்கிறேன். அவளுடைய வைர அட்டிகையின் திருகு ஒடிந்துபோய்விட்டதாம். ஆகையால் அவள் போகுமுன் நீர் அதற்கு வேறு ஒரு திருகு செய்து வாங்கிக்கொண்டு வரவேண்டும்." என்று கூறவே, ராமானுஜய்யங்கார், அவள் சொன்ன கார்யங்கள் எல்லாவற்றையும் தாமதமின்றி செய்வதாக வாக்களித்துவிட்டு,

"ஒடிந்த திருகைக் கொடுத்தால் அதைக் காண்பித்து-" என்று மேலே பேசுமுன், கங்காதரனுடைய தாயார்,

"இதோ தரச்சொல்லுகிறேன். அம்மா மங்களம்!" என்று பிரியத்துடன் தன் மருமகளை அழைக்கவே, சுமார் 18 வயதுள்ள கோபாலனுடைய மனைவி வந்து மிகவும் பய

பக்தியுடன் நின்றாள். அவளைப் பார்த்ததுமே அவள் பூர்ண கர்ப்பமென்பதை எளிதில் கண்டுகொள்ளலாம். கங்காதரனுடைய தாயார், அவளைப் பார்த்ததும், ஒடிந்த அத் திருகைக் கொண்டுவந்து கொடுக்குமாறு சொல்லவே, அப்பெண்மணி அவ்வறையைவிட்டு வெளியே சென்றாள். ஆனால் சற்றுநேரத்திற்கெல்லாம், மறுபடியும் அங்குவந்து, தாழ்ந்த குரலில்,

“அம்மா! நகைகளெல்லாம் எந்தப் பெட்டியிலிருக்கின்றன? பீரோவிலிருக்கும் கைப்பெட்டி காலியாயிருக்கிறதே.” என்று கூறவே, கங்காதரனுடைய தாயார், திடுக்கிட்டவளாய்,

“என்னடி? காலியாயிருக்கிறதா? அசடே! நன்றாய்ப் பார்.” என்றாள். ஆனால் மங்களம் தான் நன்றாய்ப் பார்த்துவிட்டதாகவும், கைப்பெட்டி காலியாயிருப்பதாகவும் மறுபடியும் கூறவே, அந்த அம்மாள்,

“எங்கே? நான் பார்க்கிறேன்.” என்று கூறியவண்ணம் எழுந்து பீரோ இருந்த அறைக்குச் சென்றாள். ராமானுஜய்யங்காரும் அவளைப் பின்பற்றிச் சென்றார். மறுநிமிஷம் மங்களம் கூறியது வாஸ்தவமென்பது வெளியாகவே, கங்காதரனுடைய தாயார் திகைப்புற்று, கொஞ்சநேரம் அப் பெட்டியை உற்றுநோக்கியவண்ணம் நின்றாள். ராமானுஜய்யங்கார், தன் சொத்தைப் பறிகொடுத்தவர்போல் அபிநயித்து,

“ஆஹா! என்ன அநியாயம்? அந்தப் பெட்டியிலிருந்த நகைகள் ரூ 25000க்குமேலிருக்குமே.” என்று கூறவே, அந்த அம்மாள்,

“நகைகள் மட்டுமா? வாசுதேவ செட்டியார் 15 தினங்களுக்குமுன் கொண்டுவந்துகொடுத்த 7500 ரூ பணமும் அதில் இருந்தது.” என்றாள். உடனே நம் அய்யங்கார், மேலும் சாமர்த்தியத்துடன் அபிநயிக்கவாரம்பித்தார். அவர்,

“அடாடா! நான் செய்தது பிசகு. உடனே அதைக் கொண்டுபோய் பாங்கியில் போட்டிருக்கவேண்டும். சரி;

18877 சென்னை-600 008

ஏன் அம்மா! நீங்கள் கடைசி தரம் இந்தப் பெட்டியை எப்பொழுது திறந்து பார்த்தீர்கள்?” என்று வினவ, அம்மாது,

“போன வாரம் பார்த்தேன். அப்பொழுது நகைகளும் பணமும் நான் வைத்தபடியே இருந்தன.” என்றாள். உடனே அய்யங்கார்,

“சரி; நான் சென்று முதலில் இதைப் போலீஸாருக்கு—” என்று அவர் மேலே பேசுமுன், அம்மாது,

“அனுவச்யம். போலீஸ் என்றால் என் உடல் நடுங்குகிறது. இதை நாம் அவர்களிடம் தெரிவித்தால் ஓடி ஒளிந்துகொண்டிருக்கும் என் பிள்ளை கங்காதரன் போகும்பொழுது அவைகளையும் எடுத்துக்கொண்டு போய்விட்டானென்று சொல்லுவார்கள். என் குழந்தைக்கு கொலைகாரப் பட்டம் வந்திருப்பது போதும். இன்னும் திருட்டுப்பட்டமும் வேண்டாம். ராமானுஜய்யங்காரே! இப்பொழுதே சொல்லிவிட்டேன். இவ்விஷயம் வெளியில் வரக்கூடாது. சரி; கோபாலன் எங்கே?” என்று வினவினாள். அய்யங்கார்,

“அவர் வெளியில் போயிருக்கிறார். ஆனால் இதை போலீஸாருக்கு—” என்று மறுபடியும் ஆரம்பிக்கவே, அம்மாது, வெறுப்புடன்,

“சரி; உம்முடன் என்னால் பேசமுடியாது. ஏன் ஐயா! வேண்டாமென்றால் மறுபடியும் அதைப்பற்றி எதற்காகப் பேசுகிறீர்? உடனே சென்று, நகை வியாபாரி ராஜகோபால செட்டியாரை அவரிடம் தயாராயிருக்கும் வைர அட்டிகைகளை எடுத்துக்கொண்டு வரச்சொல்லும். குழந்தை (மங்களம்) போகுமுன் ஒரு அட்டிகை வாங்கி, அதை அவளுடைய கழுத்தில் போட்டுத்தான் அனுப்பவேண்டும். சரி; மசமசவென்று நிற்காதேயும். உடனே போம்.—” என்று பேசிக்கொண்டிருக்கையில், அவ்வறைக்குள் நுழைந்த கோபாலன் தன் தாயாரைப் பார்த்ததும்,

“அம்மா! சீக்கிரம் என் படுக்கையைப் போடச் சொல். எனக்கு ஜ்வரம் வந்துவிட்டது.” என்று கூறிய

வண்ணம் நிற்கவும் முடியாமல் பக்கத்திலிருந்த ராமானுஜய்யங்கார்மீது சாய்ந்துவிட்டான்.

அத்தியாயம் 7.

இதற்கு முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்து 15 தினங்கள் கழிந்துவிட்டன.

அன்று இரவு சுமார் 9மணி இருக்கும்.

அச்சமயம், பட்டாபி ஜோஸ்யர் தெருவில் தன் வீட்டில் டாக்டர் கோபாலய்யர், ஒரு மேஜையின் எதிரில் உட்கார்ந்துகொண்டு நாவல் ஒன்றை மிகவும் உத்சாகத்துடன் வாசித்துக்கொண்டிருந்தார். அவ் வீட்டு வாசலில் அவருடைய வேலைக்காரனாகிய கோவிந்த நாயர் திண்ணையில் ஏற்கனவே போடப்பட்டிருந்த தன் படுக்கையில் உட்கார்ந்துகொண்டு எதைப்பற்றியோ சிந்தித்துக்கொண்டிருந்தான். அவனையும் கோபாலய்யரையும் தவிர, அச்சமயம் அவ் வீட்டில் வேறு ஒருவருமில்லை. கோபாலய்யருடைய மனைவியும் குழந்தைகளும் வெளியூர் போயிருந்தனர்.

நிற்க, வாசித்துக்கொண்டிருந்த டாக்டர் கோபாலய்யர் சற்றுநேரத்திற்கெல்லாம் புஸ்தகத்தை மூடி வைத்துவிட்டு, எழுந்து வாசற்பக்கம் சென்று, தன் வேலைக்காரனை நோக்கி,

" நாயர்! நான் படுத்துக்கொள்ளப்போகிறேன். " என்று கூறிவிட்டு, கதவை உட்பக்கம் தாளிட்டுக்கொண்டு, மாடிக்குச் சென்றார். ஆனால் படுத்துக்கொள்ளுமுன், அவ் வறையிலிருந்த ஒரு அழகிய பீரோவைத் திறந்து அதிலிருந்து ஒரு சிறு பட்டுத் துணிமூட்டையை எடுத்து, அதை அவிழ்த்து, அதிலிருந்த பல நோட்டுக்களை எண்ணவாரம்பித்தார். அதில் 30 நூறுரூபாய் நோட்டுகளும், 26 ஐம்பதுரூபாய் நோட்டுகளும் ஒரு பெரிய கவரும் இருந்தன. கோபாலய்யர் அக்கவரைப் பார்த்ததும், ஒருதரம் விசனத்துடன் பெருமூச்செறிந்தார். பிறகு, "அடாடா! இதை நான் நாளைக்காலை அவனுடைய தாயாரிடம் கொடுத்துவிடவேண்டும்போலிருக்கிறதே. ஆஹா! அவன் இக் கார்யத்தைச் செய்திருப்பானென்று யாராவது ஸ்வப்பனத்திலும் நினைத்திருப்பார்களோ? " என்று தன் வாயைவிட்டுக் கூறியவண்ணம், அக் கவரையும் பணத்தையும் மறுபடியும் மூட்டையாய்க் கட்டி தன் படுக்கையிலிருந்த ஒரு தலையணையின் கீழ் வைத்தார். பிறகு, எழுந்து, அவ்வறையில் எரிந்துகொண்டிருந்த விளக்கை அணைக்கும் தருவாயில், கீழே வாசற்கதவை யாரோ மிகவும் அவசரத்துடன் தட்டும் சப்தம் கேட்கவே, கீழே சென்று அவர் அக் கதவைத் திறந்ததும், வெளியில் நின்றுகொண்டிருந்த ராமானுஜய்யங்கார்,

" டாக்டர்வாள்! தயவுசெய்து உடனே வரவேண்டும். கோபாலனுக்கு உடம்பு அதிகமாய்விட்டது. " என்று கூறியவண்ணம் தன் அவசரத்தின் மிகுதியால், டாக்டருடைய கரங்களைப்பற்றி இழுக்கவே, கோபாலய்யர்,

" ஸ்வாமி! தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். நான் வருவதில் பிரயோஜனமில்லை. அவன் இனி பிழைப்பது முடியாத கார்யம். " என்றார். ஆனால் ராமானுஜய்யங்கார், கெஞ்சிய குரலில்,

" அது எனக்கும் தெரியும். இருந்தபோதிலும் நீங்கள் தயவுசெய்து வரவேண்டும். " என்று மறுபடியும் மன்றாடவே, கோபாலய்யர்,

" ஏன் ஸ்வாமி! நான் வந்து செய்வது என்ன? நான் வருவதில்பிரயோஜனமிருந்தால் நான் வரமாட்டேனென்று சொல்லுவேனா? அதுவும் 15 வருஷகாலமாக, அவ் வீட்டில் இவ்வளவுதூரம் நெருங்கிப் பழகிவிட்டு, அந்தப் பையன் (கோபாலன்) விஷயத்தில் நான் அசிரத்தையாயிருப்பேனா? நான் என்ன செய்கிறது? என்னால் முடிந்தவரையில் பார்த்துவிட்டேன். " என்றார். ராமானுஜய்யங்கார்,

" நீங்கள் அந்தப் பையன் விஷயத்தில் எவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டீர்கள் என்பது எனக்கு நன்றாய்த்

தெரியும். இப்பொழுதும் நீங்கள் வந்தால் அவன் பிழைத்துவிடுவானென்று நான் சொல்லவில்லை. ஆனால் நீங்கள் வரும் பக்ஷத்தில் அந்தம்மாளுக்கு (கோபாலனுடைய தாயாருக்கு) கொஞ்சம் திருப்தியாயிருக்கும்." என்று மறுபடியும் அவருடைய கரங்களைப்பற்றி இழுக்கவே, கோபாலய்யர்,

"அப்படியானால் வருகிறேன். அந்தம்மாளை நான் என் தாயாரென்றே நினைத்துக்கொண்டிருக்கிறேன். மகா உத்தமியாகிய அவளுக்கு இப்பேர்ப்பட்ட மனோவியாகூலங்கள் வரக்கூடாது. ஆனால் இந்தப் பையன் (கோபாலன்) இருப்பதைக்காட்டிலும் இறப்பதே நலம்." என்றார்.

இதைக்கேட்டதும், ராமானுஜய்யங்கார், ஒன்றும் புரியாமல் வியப்புற்று, ஆவலுடன்,

"டாக்டர்வாள்! நீங்கள் சொல்வதின் அர்த்தம் எனக்குப் புரியவில்லையே. அந்தப் பையன் இருந்தால்—" என்று மேலே பேசுமுன், கோபாலய்யர்,

"அதைப்பற்றி பேசிக்கொண்டிருக்க இது சமயமல்ல. இரும். இதோ வருகிறேன்." என்று கூறியவண்ணம், உள்ளே சென்றவர், 10 நிமிஷநேரத்திற்குள் உடுத்திக்கொண்டு மறுபடியும் வெளியேவந்து, இதற்குள் எழுந்து நின்றுகொண்டிருந்த தன் வேலைக்காரனை நோக்கி,

"நாயர்! வீட்டை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்." என்று கூறிவிட்டு, ராமானுஜய்யங்காருடன் போய்விட்டார்.

கோபாலய்யர் மறுபடியும் தன் வீட்டிற்குத் திரும்பி வந்தபொழுது மணி சுமார் 11 இருக்கும். அவர் தன் வீட்டின் சமீபம் வந்தபொழுது எதிர்வீட்டுத் திண்ணையில் கொசுக்கடியினாலும் காற்று இல்லாததாலும் தூக்கமின்றி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த மத்தங்குடி தியாகராஜய்யர், அவரைக் கண்டதும்,

"என்ன. கோபாலய்யர்! இந்நேரத்தில் எங்கே போய்விட்டு வருகிறீர்கள்?" என்று வினவினார். கோபாலய்யர்,

"சந்நியாசித்தெரு வக்கீல் கல்யாணராமய்யர் பிள்ளை கோபாலனுக்கு—" என்று அவர் மேலே பேசுமுன், தியாகராஜய்யர், ஆவலுடன்,

"ஆமாம். அவனுக்கு இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று வினவவே, கோபாலய்யர்,

"அவன் இறந்துவிட்டான்." என்று விடையளித்துவிட்டு, மேலும் தியாகராஜய்யருடன் பேச இஷ்டப்படாதவர்போல், அவசரத்துடன் தன் வீட்டுப் படிகளில் ஏறியவர், திண்ணையில் கோவிந்த நாயருடைய படுக்கை காலியாயிருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டார். உடனே "ஓஹோ! மோசம்போய்விட்டேன்போலிருக்கிறதே." என்று தன் வாயைவிட்டுக் கூறியவண்ணம், பதறிய மனதுடன், திறந்துகிடந்த அவ் வீட்டிற்குள் நுழைந்து மாடிக்கு ஓடினார். பிறகு தன் படுக்கை அறைக்குள் நுழைந்து, நாம் சொன்ன அத் தலையணையைத் தூக்கிப் பார்த்தபொழுது, அவர் அதன் கீழ் வைத்திருந்த பணமூட்டை காணப்படவில்லை. "சரிதான்; இது அந்த மலையாளத்தானுடைய வேலைதான். எனக்கு ஆதியிலிருந்தே அவனிடம் நம்பிக்கை இல்லை. அடாடா! பணம் போனாலும் பாதகமில்லையே. சண்டாளன் அத்துடன் அக் கடிதத்தையும் அடித்துக்கொண்டு போய்விட்டானே." என்று புலம்பினார்.

அத்தியாயம். 8.

கங்காதரனுடைய தமயன் கோபாலன் இறந்து 6 மாதங்களாய்விட்டன.

ஒருநாள் பிற்பகல் 3மணி இருக்கும்.

அச்சமயம் ஸரஸ்வதியின் தாயார் தன் வீட்டில் கவலையே அவதாரமோவென நினைக்கத்தக்கவிதம், உட்கார்ந்துகொண்டிருந்தாள். ஆனால் தற்சமயம் அவளுடைய கவலைக்குக் காரணம் பணமல்ல. ஏனெனில், கங்காதரனு

டைய தாயார் தான் கூறியதுபோலவே, அவள் பணத்தின் பொருட்டு சிறிதும் கஷ்டப்பட நியாயமின்றி, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டாள். அதுவுமின்றி, அவ்வுத்தமி, ஸரஸ்வதியின் விவாஹச் செலவையும் தானே ஒப்புக்கொள்ளுவதாக வாக்களித்திருந்தாள். ஆனால் அதுவரையில் ஸரஸ்வதியின் தாயார் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும், திருப்திகரமான வரன் ஒன்றும் அகப்படவில்லை. ஆகவே, தற்சமயம் அவளுடைய கவலைக்குக் காரணம் ஸரஸ்வதியே.

அம்மாது "ஹே தெய்வமே! இப்படி நான் எவ்வளவு காலம் என் பெண்ணை வைத்துக்கொண்டிருக்க முடியும்? அந்தோ! அவளுக்கு வயது 16 ஆகப்போகிறதே. ஏற்கனவே பலர் கண்டபடி பேசவாரம்பித்துவிட்டார்களே. என் பிள்ளை உயிருடன் இருந்தபொழுது, அவளை விவாஹம் செய்துகொள்ள நான் நீ என்று போட்டிபோட்டுக்கொண்டு முன்வந்த பையன்களெல்லாம் இப்பொழுது அவளை விவாஹம் செய்துகொள்ள இஷ்டப்படவில்லையே. அதற்குக் காரணமென்னவென்பதும் எனக்குப் புரியவில்லையே. ஒருக்கால் என் பெண் ஏற்கனவே ஒருவனை அவ்வளவு தூரம் காதலித்தாளென்பது அதற்குக் காரணமாயிருக்குமோ? இல்லாவிட்டால், என் பிள்ளை குருஸ்வாமி இறந்ததற்குக் காரணம் அவளே யென்று எல்லோரும் என் குழந்தையை வெறுக்கிறார்களோ? ஐயோ! பரம ஏழையாயிருந்த போதிலும், நற்குடியில் பிறந்த ஒரு வாலிபன் கிடைத்தால் போதுமென்று நான் பலவிதங்களில் சிரமப்பட்டும், ஒன்றும் பிரயோஜனமில்லாமற் போய்விட்டதே. ஹே அநாத ரக்ஷகா! இவ்வளவு தூரம் பாடுபட்டு வளர்த்துவிட்டு, என் குழந்தையை நரகத்தில் தள்ளுவதுபோல் ஒரு கிழவனுக்கா கொடுப்பது? அவளுடைய ஜாதகத்தை அனுப்பு என்று அவ்வளவு ஆவலுடன் கடிதம் எழுதிய என் சகோதரியின் புருஷனிடமிருந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் இன்னும் பதிலில்லையே. அவர் தன் தமக்கையின் பிள்ளைக்கு வயது 23தானென்றும், அவன் ஏற்கனவே பம்பாயில் 100 ரூ

சம்பாதித்துக்கொண்டிருக்கிறானென்றும் எழுதியதைப் பார்த்ததும் நான் எவ்வளவோ சந்தோஷித்தேன். அந்தப் பையனும் ஸரஸ்வதியைப் பார்த்ததும் அவளை விவாஹம் செய்துகொள்ள மிகவும் ஆசைப்படுபவன்போல் காணப்பட்டானே. ஒருக்கால் ஜாதகம் சரியாயில்லையோ? அல்லது யாராவது அவனைக் கலைத்துவிட்டார்களோ? ஹே பரமேசுவரா!—" என்று அவள் மேலே சிந்திக்குமுன் அவ் வீட்டு வாசலில் வண்டி ஒன்று வந்து நிற்கவே, அம்மாது ஆவலுடன் எழுந்து வெளியே ஓடினாள். மறுநிமிஷம் அவளுடைய தங்கையின் புருஷனாகிய சிதம்பரய்யர் அவ் வீட்டிற்குள் நுழையவே அவளுடைய சந்தோஷம் அளவற்றது. ஒருதரம், 'அப்பாடா!' என்று பெருமூச்செறிந்தாள். பிறகு வந்தவரை அன்புடன் வரவேற்று, அவருக்கு ஆஸனம் அளித்து, மரியாதையுடன் அவருடைய யோகக்ஷேமங்களை விசாரித்தாள். பிறகு, ஆவலுடன்,

"ஆமாம்; ஜாதகம் அனுப்பினேனே. அது—" என்று அவள் மேலே பேசுமுன், சிதம்பரய்யர்,

"அதைப்பற்றிப் பேசும்பொருட்டுத்தான் இப்பொழுது வந்திருக்கிறேன். நீங்கள் அனுப்பிய ஜாதகம் வந்த மறுநாளே நான் திடீரென்று ஒரு முக்கிய கார்யார்த்தம் திண்டுக்கல் போய்விட்டேன். பிறகு நேற்றுத்தான் மாதவபுரி திரும்பிவந்தேன். ஜாதகம் சரியாயிருக்கிறது. என் மருமானும் இந்தக்குட்டி ஸரஸ்வதியை கல்யாணம் செய்துகொள்ள ஒரே துடியாயிருக்கிறான். ஆனதால் என் தமக்கை அடுத்தவாரமே விவாஹத்தை நடத்திவிடவேண்டுமென்று சொல்கிறாள். வெள்ளிக்கிழமை தினம் ஒரு நல்ல முகூர்த்தம் இருக்கிறது. இவ்வளவு சீக்கிரம் உங்களால் ஏற்பாடுசெய்ய முடியுமோ?" என்று வினவினார். ஸரஸ்வதியின் தாயார்,

"முடியாமல் என்ன? நான் தயார். ஆமாம்; பாக்கி விஷயங்கள்—" என்று தயங்கவே, சிதம்பரய்யர்,

"அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். என் மருமான் நன்றாய்ப் படித்த புத்திசாலி. அவன் வரதக்ஷிணை

ஒருபைசாகூட எதிர்பார்க்கவில்லை. இன்னும் அனாவசியமாய் நான்குநாள் கல்யாணம் செய்யவேண்டாமென்று சொல்கிறான். ஒருநாள் கல்யாணம் உப்பிலியப்பன் ஸந்நிதியில் நடத்திவிடலாம். நீங்கள் உங்களுடைய பெண்ணுடன் வெள்ளிக்கிழமை காலமே அங்குவந்துவிட்டால் போதும். மற்ற எல்லா ஏற்பாடுகளையும் நான் செய்துவிடுகிறேன். எனக்கு இருபக்கங்களிலும் பாத்தியமில்லையோ?'' என்றார். ஸரஸ்வதியின் தாயார்,

“எனக்கு புருஷ ஸகாயத்திற்கு உங்களைத்தவிர வேறு யார் இருக்கிறார்கள்? நீங்கள் சொல்கிறபடி நான் செய்யத் தயார். எப்படியாவது நீங்கள்தான் இதை நடத்திவைக்க வேண்டும்.'' என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவே, சிதம்பரய்யர்,

“அதான் சொல்லிவிட்டேனே. நீங்கள் எதற்கும் கவலைப்படவேண்டாம். இக் கல்யாணத்தின்பொருட்டு நீங்கள் ஒருதம்படிகூட செலவழிக்கவேண்டியதில்லை. எல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். சரி; எனக்கு கொஞ்சம் கடைத்தெருவுக்குப் போகவேண்டும். போய்விட்டு இதோ அரைமணி நேரத்தில் வந்துவிடுகிறேன்.'' என்று கூறிவிட்டு எழுந்து நின்றார். ஸரஸ்வதியின் தாயார்,

“சரி; அவசியம் வந்துவிடுங்கள். ராத்திரி இங்கேயே சாப்பிடவேண்டும்.'' என்று கேட்டுக்கொள்ளவே, சிதம்பரய்யர்,

“அவசியம் வருகிறேன்.'' என்று வாக்களித்துவிட்டுப் போய்விட்டார். ஆனால் கொஞ்சதூரம் சென்றதும் அவர் “நாம் இதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இருக்கட்டும்; எப்படியாவது இவளைச் சரிப்படுத்தி, வேண்டுமானால் நாளைக்காலைவரையில் இருந்து, இவளையும் அந்தக் குட்டியையும் கூடவே அழைத்துக்கொண்டுபோய் விடவேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பயலுடைய விஷயம் இவளுடைய காதுக்கும் எட்டிவிடும்.'' என்று தன்னுள் சொல்லிக்கொண்டார்.

நிற்க, தன் தங்கையின் புருஷன் சென்றதும், ஸரஸ்வதியின் தாயார், மிகவும் சந்தோஷித்தவளாய், சமையல் அறைக்குள் நுழையவே அங்கு தன் பெண், தேகம் குலுங்க, விசித்துவிசித்து அழுதுகொண்டிருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டாள். உடனே துரிதமாய்ச் சென்று, அவளுடைய பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, அன்பொழுகும் குரலில்,

“அம்மா! இப்படி கல்யாணப் பேச்சை எடுக்கும் பொழுதெல்லாம் நீ அழுவது நியாயமா? என் செல்வமே! நீ கங்காதரனை விவாஹம் செய்துகொண்டிருந்தால் நானும் எவ்வளவோ சந்தோஷமடைந்திருப்பேன். ஆனால் அது தெய்வத்திற்கு சம்மதமில்லையே. அதற்கு நாம் என்ன செய்யமுடியும்? பெண் ஜன்மமெடுத்த நீ ஒரு புருஷனிடம் போய்ச் சேரவேண்டாமா? நாம் கொடுத்துவைத்தது இவ்வளவுதானென்று நீ மனதைத் தேற்றிக்கொள்ளவேண்டாமா? என் கண்மணியே! உன் புத்திசாலித்தனத்தைக் கண்டு எல்லோரும் ஆச்சர்யப்படுவது வழக்கமாயிற்றே. நீ இப்படிச் செய்யலாமா? அம்மா! எழுந்திரு. கண்களைத் துடைத்துக்கொள்—'' என்று சொல்லிக்கொண்டிருக்கையில், சுமார் 18 வயதுள்ள ஒரு பெண், அவ்வறைக்குள் நுழைந்து, ஸரஸ்வதியின் நிலைமையைக் கண்டதும் திகைப்புற்று, அவளை அன்புடன் நோக்கியவண்ணம் நின்றாள்.

ராஜம் எனப் பெயர்கொண்ட அப் பெண்மணி நம் ஸரஸ்வதியின் முக்கிய தோழிமார்களில் ஒருவளாகையால் அவளுக்கு தன் தோழி ஸரஸ்வதி கங்காதரனைக் காதலித்ததும், ஆனால் அவள் அவனை விவாஹம் செய்துகொள்ளுவது சாத்தியமில்லாமற்போய்விட்டதும், நன்றாய்த் தெரியும். அதுவுமன்றி ஸரஸ்வதி, கங்காதரனை நினைத்துக்கொண்டு, ஏங்கித் துடிக்கும்பொழுதெல்லாம் ராஜம் அவளை சமாதானப்படுத்துவது வழக்கம். ஆகவே அவளைக் கண்டதும் ஸரஸ்வதியின் தாயார்,

“ராஜம்! இங்கேவா.'' என்று கூறியவண்ணம் அவளைத் தனிமையில் அழைத்துச் சென்று, சிதம்பரய்யர் வந்

ததையும், தன் பெண்ணின் விவாஹம் நிச்சயமாய்விட்டதையும் விபரமாய்ச் சொல்லிவிட்டு, "அவள் தன் வழக்கப்படி அழவாரம்பித்துவிட்டாள். நீதான் அவளை எப்படியாவது சமாதானப்படுத்தவேண்டும். நான் சந்நியாசித்தெரு வரையில் போய்விட்டு இதோ அரைமணி நேரத்திற்குள் வந்துவிடுகிறேன்." என்று கூறிவிட்டு அவசரத்துடன் வெளியே சென்றாள்.

ஸரஸ்வதியின் தாயார் சந்நியாசித் தெருவில் நம் கங்காதரனுடைய வீட்டிற்கே போகும் எண்ணத்துடன் சென்றாளென்பதை நம் நேயர்களே ஊகித்துக்கொள்ளலாம். அவள் அடிக்கடி சென்று கங்காதரனுடைய தாயாரைப் பார்த்துப் பேசிவிட்டு வருவது வழக்கம். கோபாலன் இறந்தது முதற்கொண்டு அவனுடைய தாயார், உலகத்தையே வெறுத்து, ஸதா, "ஹே பாழுந் தெய்வமே! உயிருடனிருக்கும்பொழுதே ஒரு குழந்தையைப் பறிகொடுத்தேனே; அது போராதா? இவ்விதம் பாக்கியிருந்த ஒருவனையும் நீ அபஹரித்துக்கொண்டுபோகவேண்டுமோ? என் குழந்தைகள் போனபிறகு எனக்கு இந்தப் பிரபஞ்சத்தில் என்ன காரியம்?" என்று புலம்புவதிலேயே தன் காலத்தைக் கழித்துவந்தாள். ஆனாலும் நம் ஸரஸ்வதியின் தாயாரை அவ்வுத்தமி, தன் ஸகோதரிபோல் பாவித்து, வியக்கத்தக்க பிரியத்துடனும மரியாதையுடனும் நடத்திவந்தாள். ஆகவே, அன்று அவள் ஸரஸ்வதியின் தாயாரைக் கண்டதும், அவளைப் பிரியத்துடன் அழைத்து, தன் பக்கத்தில் உட்கார்ந்துகொள்ளுமாறு உபசரித்துவிட்டு, ஏதேனும் விசேஷமுண்டோவென்று கேட்க, ஸரஸ்வதியின் தாயார், சிதம்பரய்யர் வந்ததையும், பிறகு நடந்ததையும் விபரமாய்க் கூறவே, அம்மாது,

"அப்படியா? ரொம்ப ஸந்தோஷம். ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். இக் காலத்தில் சாப்பிட சோறுமில்லாத பையன்கள்கூட வரதக்ஷிணையும் சீருமில்லாமல் கல்யாணம் செய்துகொள்ளுவதில்லை. நீயோ நீ நிச்சயித்திருக்கும் பையனுக்கு வயது 23 தான் என்றும், அவன் பம்பாயில் 100 ரூ

சம்பாதிக்கிறானென்றும் சொல்லுகிறாய். அப்பேர்ப்பட்டவன், 'எனக்கு ஒன்றும் வேண்டாம். பெண்ணைக் கொடுத்தால் அதிகம்.' என்று சொல்லுவது மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. அம்மா! இவ்வளவு பாடுபட்டு வளர்த்துவிட்டு, குழந்தையை முன்பின் தெரியாத இடத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிடாதே. அவள் எனக்கே நாட்டுப்பெண்ணாய் வந்துவிடுவாள். அவளும் என் குழந்தையும் சந்தோஷமாயிருப்பதைக் கண்டு நாமும் சந்தோஷப்படலாமென்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்த என்னுடைய வாயில் தெய்வம் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டது. அவள் பிறர் வீட்டிலாவது யாதொரு கஷ்டமுமில்லாமல் சந்தோஷமாயிருப்பாளானால் நானும் கொஞ்சம் சந்தோஷப்படுவேன். ஆகையால் நீ நிச்சயித்திருக்கும் பையனைப்பற்றி முதலில் நன்றாய் விசாரித்துப் பார்.' என்றாள். ஸ்ரஸ்வதியின் தாயார்,

"அம்மா! நீங்கள் சொல்லுவது நியாயமே. ஆனால் இதில் நாம் கவலைப்படவேண்டியது அனாவசியம். ஏனென்றால் அந்தப் பையன் என் தங்கை புருஷனுடைய மருமான். அவர்தான் இதை ஏற்பாடுசெய்திருக்கிறார். அவர் என்னை மோசஞ்செய்யமாட்டார்." என்று கூறவே, கங்காதரனுடைய தாயார்,

"அது எனக்குத் தெரியாது. ஒருக்கால் அவர்கள் மாலை மாற்றும்பொழுது ரூ 300 கொடுத்தால்தான் தாலி கட்டமுடியுமென்று சொல்லலாம். ஆகையால் நான் 500 ரூ பணம் தருகிறேன். எல்லாவற்றிற்கும் நீ அதைக் கையில் வைத்துக்கொள்." என்று கூறவே, ஸரஸ்வதியின் தாயார்,

"சரி... ஆமாம்; கங்காதரனுடைய சமாசாரம் ஏதேனும் தெரிந்ததோ?" என்று வினவவே, கங்காதரன் தாயாருடைய முகம் வாட்டமடைந்தது. உடனே அவளுடைய கண்களிலிருந்து நீர் தாரைதாரையாய் வெளிக்கிளம்பியது. அவள், மிகவும் பரிதாபகரமான குரலில்,

"ஒன்றும் தெரியவில்லை. அவன் உயிருடனாவது இருக்கிறானோ அல்லது—" என்று மேலே பேசத் துணியாதவள்போல் நிறுத்திவிட்டு அழவாரம்பித்தாள்.

*　　*　　*　　*　　*

நிற்க, ஸரஸ்வதியின் தாயார் வெளியே சென்றதும், ராஜம் தன் தோழியின் பக்கத்தில் சென்று உட்கார்ந்துகொண்டு, அவளை தன்னால் முடிந்தவரையில் சமாதானப்படுத்தலானாள். ஆனால் ஸரஸ்வதி அவள் பேசியதை சிறிதும் கவனிக்காமல், மேலும் அதிகமாய் அழவாரம்பித்தாள். கடைசியில்,

"அடி ராஜம்! நான் என்னடி செய்வேன்? கல்யாணம் என்ற வார்த்தையைச் சொன்னதுமே அவர் (கங்காதரன்) என் எதிரில் நிற்பதுபோல் இருக்கிறதே. அடியே! அப்படியிருக்கும்பொழுது நான் எப்படி மற்றொரு புருஷனுடன் கூடிவாழ சம்மதிக்கமுடியும்? ஐயோ! நான் என்ன செய்வேன்? ராஜம்! தற்கொலை செய்துகொண்டுவிடுவோமென்றால், முன்பின் யோசிக்காமல், நான் அப்படிச் செய்வதில்லையென்று அவருக்கு அவருடைய தலையில் அடித்து சத்யம் செய்துகொடுத்துவிட்டேனே." என்று கதறவே, ராஜம், வியப்புற்று,

"அவர் தலையில் அடித்து சத்யம் செய்துகொடுத்தாயா? இதுவரையில் நீ இதை என்னிடம் சொல்லவில்லையே." என்றாள். உடனே ஸரஸ்வதி, தடுமாற்றத்துடன்,

"அடியே! இதுவரையில் இவ்விஷயத்தை நான் ஒருவரிடமும் சொல்லவில்லை. ராஜம்! அன்று போலீஸார் என்னை விசாரித்தபொழுது நான் எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் அவர்களிடம் சொல்லவில்லை. அன்று இரவு நான் இவ் வீட்டிற்குள் நுழைந்தபொழுது, முதலில் என் தமயனுடைய பிரேதத்தைத் தவிர, வேறு ஒருவருமில்லை என்று நினைத்தேன். ஆனால் நான் சவத்தைப் பார்த்துவிட்டு, என்னசெய்வதென்று புரியாமல் திகைப்புற்று நின்றுகொண்டிருக்கையில், கூடத்திலிருந்த ஒரு மறைவிலிருந்து

அவர் (கங்காதரன்) வெளியே வந்தார். அவரைப் பார்த்ததும் நான் நடந்த விஷயமென்னவென்று கேட்க, அவர் அவசரத்துடன் என்னை முதலில் சென்று வாசற்கதவைத் தாளிட்டுவிட்டுவருமாறு சொல்லவே, நான் ஓடிச்சென்று, அப்படியே செய்துவிட்டு, மறுபடியும் வந்து விஷயமென்னவென்று கேட்க, அவர், அன்று இரவு தற்கொலைசெய்துகொள்ளப்போவதாக நான் எழுதிய கடிதத்தைப் பார்த்ததும், தான் பயந்து என்னைப் பார்க்கும்பொருட்டு இவ் வீட்டிற்கு வந்தபொழுது, இதில் ஒருவருமில்லாததால், என்னை எதிர்பார்த்தவண்ணம் தான் காத்துக்கொண்டிருந்ததாகவும், ஆனால் சற்றுநேரத்திற்கெல்லாம் வெளியிலிருந்து திரும்பிவந்த என் தமயன் தன்னைக் கண்டதும், வாயில் வந்தபடி திட்டியதுமன்றி, தன்னை அடிக்கவும் பிரயத்தனப்பட்டதால் இருவரும் தரையில் விழுந்து யுத்தம் செய்ததாகவும், அதில் அச்சமயம் மித்தத்தின் ஓரத்திலிருந்த என் தமயன் தவறி, அம் மித்தத்தில் விழவே, அதில் கிடந்த அம்மியில் அவனுடைய பின் மண்டை அடிபட்டு, அவன் இறந்ததாகவும் கூறினார். பிறகு தான் கொல்லைப் பக்கமாய் ஓடிவிடவேண்டுமென்றும் ஆனால் தான் போகுமுன், தனக்கு நான் இனி தற்கொலை செய்துகொள்ளுவதில்லையென்று சத்யம் செய்துகொடுக்கவேண்டுமென்றும் சொன்னார். அடி ராஜம்! அப்பொழுது அவர் அவ்விதம் அக் குற்றத்தைத் தானே செய்ததாக ஒப்புக்கொண்டு, போலீஸாருக்குக் கடிதம் எழுதிவைத்திருந்ததும், அவர் உடனே ஓடி ஒளிந்துகொள்ளத் தீர்மானித்திருந்தாரென்பதும் எனக்குத் தெரியாது. அவர் கொல்லைப்பக்கமாய் ஓடிப் போய்விட்டால், அவர் இவ் வீட்டிற்கு வந்த விஷயமே வெளியில் வராதென்று நம்பினேன். ஆகவே, முன்பின் யோசிக்காமல், அவர் கேட்டபடி சத்யம் செய்துகொடுத்தேன். அடியே! நான் வாயால் மட்டும் சொன்னால் போராதென்று தன் தலையிலும் அடிக்கச் சொன்னார். ராஜம்! அப்படிச் செய்துவிட்டு, நான் இப்பொழுது எப்படியடி தற்கொலை செய்துகொள்ளமுடியும்? நான் என் உயிரை மாய்த்துக்கொள்ள சிறிதும் அஞ்சவில்லை. என்னிடம்

இன்னும் விஷம் தயாராயிருக்கிறது. ஹே தெய்வமே! எனக்கு என்னசெய்வதென்று புரியவில்லையே." என்று மறுபடியும் அழுவாரம்பிக்கவே, ராஜம், அவளை அன்புடன் அணைந்துகொண்டு, மறுபடியும் சமாதானப்படுத்திவிட்டு,

"ஆமாம்; அவர் இவ் வீட்டிற்கு வந்தபொழுது இதில் வேலைக்காரி நாகு இல்லையோ? நீ அவளை வீட்டில் வைத்து விட்டுத்தானே பார்வதியைப் பார்க்கப் போனாய்:" என்று வினவ, ஸரஸ்வதி,

"ஆமாண்டி; அதுதான் எனக்கும் புரியவில்லை. அப் சண்டாளி அப்பொழுது எங்கே இருந்தாளென்பது எனக்குத் தெரியவில்லை. அவளை நேரில் கண்டு கேட்போமென்றால், அவள் மாயமாய்ப் போய்விட்டாளே." என்று புலம்பிக்கொண்டிருக்கையில், அவளுடைய தாயார் வந்து சேர்ந்தாள்.

ஒருமணி நேரத்திற்கெல்லாம், கடைத்தெருவுக்குச் சென்ற சிதம்பரய்யர் வந்துசேரவே, ஸரஸ்வதியின் தாயார் மறுபடியும் அவருடைய தமக்கை பிள்ளையைப் பற்றி விசாரித்தாள். ஆனால் சிதம்பரய்யர், அவள் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் அவள் நம்பத்தக்கவிதம் விடையளித்ததுமன்றி, அவள் அவ்விதம் தன்னை சந்தேகித்தது மிகவும் பிசகென்று உணர்ந்து விசனப்படுமாறு செய்துவிட்டார். பிறகு மேலும் சாமார்த்தியமாய்ப் பேசி, அவளையும் அவளுடைய பெண்ணையும் மறுநாட்காலை தன்னுடன் மாதவபுரி வர ஏற்பாடுசெய்துவிட்டார். பிறகு, தன்னுள்,

"பேஷ்! இனி பயமில்லை." என்று சந்தோஷித்தார்.

அத்தியாயம். 9.

ஸரஸ்வதியின் விவாஹம் நிச்சயிக்கப்பட்ட மூன்றாவது தினம் (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் சுமார் 1 மணி இருக்கும்.

அச்சமயம் மதுரையில் ஒரு பெரிய ஹோட்டலின் மாடியில் ஒருவன், சிந்தாசாகரத்தில் மூழ்கியவனாய், உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் எவ்வளவோ சாமர்த்தியத்துடன் தன் முகத்தோற்றத்தை மாற்றிக்கொண்டிருந்தபோதிலும், அவனுடன் ஏற்கனவே நெருங்கிப் பழகிய ஒருவன், அவன் சுமார் 6மாதகாலத்திற்குமுன் வஸந்தபுரி டாக்டர் கோபாலய்யருடைய வீட்டிலிருந்து 4300 ரூ பணத்தையும், நாம் சொன்ன அக் கடிதத்தையும் திருடிக்கொண்டு ஓடிய கோவிந்த நாயரே என்பதை எளிதில் தெரிந்துகொள்ளக்கூடும். அவன் தற்சமயம் மாதவ நாயர் என்ற மாறு பெயருடன், ஒரு பிராமணனை தன்னுடன் சேர்த்துக்கொண்டு, அந்த ஹோட்டலை நடத்திக்கொண்டிருந்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம், ஒருவன் கையில் ஒரு அழகிய பெட்டியுடன் அவ்வறைக்குள் நுழையவே, கோவிந்த நாயர், தன் தலையைத் தூக்கி வந்தவனையும் அவனுடைய கையிலிருந்த பெட்டியையும் பார்த்ததும்சந்தோஷத்துடன்,

“பேஷ்! பெட்டி வந்துவிட்டதே.” என்று கூறிய வண்ணம் எழுந்து, அப் பெட்டியை தன் கையில் வாங்கிக்கொள்ளவே, அதைக் கொண்டுவந்தவன், மரியாதையுடன்,

“ஆனால் இதுவரையில் உங்களிடம் பெட்டி இல்லையோ?” என்று வினவினான். கோவிந்த நாயர்,

“பெட்டி இல்லாமலிருக்கமுடியுமா? ஆனால் அது ஒரு சாதாரணமான தகரப்பெட்டி.” என்று விடையளிக்கவே, அம் மற்றொருவன், சிரித்துக்கொண்டே,

“இனிமேல் அந்தத் தகரப்பெட்டி உங்களுக்கு வேண்டியதில்லையே.” என்றான். கோவிந்த நாயர்,

“இல்லை. வேண்டுமானால் அதை நீ எடுத்துக்கொள்ளலாம். இரு; இதோ ஒழித்துத் தருகிறேன். எங்கே அதை என்னிடம் எடுத்துக்கொண்டுவா.” என்று கூறியவண்ணம் ஒரு மூலையில் இருந்த ஒரு தகரப்பெட்டியைக் காண

பிக்கவே, அம் மற்றொருவன் அதை எடுத்துவந்து நாயர்முன் வைத்தான். உடனே கோவிந்த நாயர் அதைத் திறந்து, அதிலிருந்த சில விலையுயர்ந்த வேஷ்டிகளையும் பட்டுச் சட்டைகளையும், பல கடிதங்களையும் எடுத்துத் தரையில் வைத்தான். பிறகு அவைகளை ஒவ்வொன்றாய் மறுபடியும் எடுத்து தன் புதுப்பெட்டியில் வைக்க ஆரம்பித்தான். நடுவில், ஒரு பெரிய கவரை கையில் எடுத்ததும், “இது என்னிடம் வெகுநாட்களாக இருக்கிறதே. இதற்குள் இருக்கும் கடிதத்தில் எழுதியிருக்கும் விஷயமென்னவென்பதும் எனக்குப் புரியவில்லை. இருக்கட்டும்; கிருஷ்ணய்யரை வாசிக்கச் சொல்லுகிறேன்.” என்று தன் வாயைவிட்டுக் கூறியவண்ணம், அதைப் பெட்டியில் வைக்காமல், மற்ற சாமான்களை யெல்லாம் வைத்து, பெட்டியைப் பூட்டிவிட்டு, அம் மற்றொருவனை நோக்கி,

“சரி; இதை நீ எடுத்துக்கொண்டு போகலாம். கீழே கிருஷ்ணய்யர் இருந்தால் இங்கு வரச்சொல்.” என்று கூறவே, அம் மற்றொருவன் தகரப்பெட்டியுடன் கீழே சென்றான். சற்று நேரத்திற்கெல்லாம் கிருஷ்ணய்யர் வரவே, கோவிந்த நாயர்,

“ஐயர்! என்னிடம் தமிழில் எழுதப்பட்ட கடிதம் ஒன்று இருக்கிறது. எனக்கு தமிழ் பேசத் தெரியுமே யொழிய வாசிக்கத் தெரியாது.” என்று சொல்லிக்கொண்டே, அக் கவரைக் கிருஷ்ணய்யரிடம் கொடுத்து “எங்கே இதை வாசியும். கேட்போம்.” என்றான். கிருஷ்ணய்யர் அதை வாசித்து முடித்ததும் நாயருக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை. அவன் கொஞ்சநேரம் அசைவின்றித் தரையை உற்றுநோக்கியவண்ணமிருந்தான். கிருஷ்ணய்யரும், திகைப்புற்றவர்போல், மௌனம் சாதித்தார். பிறகு ஆவலுடன் மறுபடியும் அக் கடிதத்தை வாசித்தார். கடைசியில், நாயர்,

“அடாடா! இவ்வளவு முக்கியமான கடிதத்தை நான் மேலும் வைத்துக்கொண்டிருப்பது மிகவும் பிசகு. சரி; இதை நான் உடனே கோபலய்யருக்கு அனுப்பிவிடவேண்

டும். ஆனால் அவர் இதற்குள் தன் பணத்தைத் திருடியவன் நானேயென்று நிச்சயித்திருப்பாராகையால், நான் இவ்வூரில் இருக்கிறேனென்பது அவருக்குத் தெரியக்கூடாது. பேஷ்! இதுதான் நல்ல யோசனை.” என்று தன்னுள் சிந்தித்தவனாய், எதிரில் உட்கார்ந்துகொண்டிருந்த கிருஷ்ணய்யரை நோக்கி,

“ஐயர்! நீர் இன்று சிதம்பரம் போவதாகச் சொன்னீரே. போகப்போகிறீரோ?” என்று கேட்க, கிருஷ்ணய்யர்,

“ஏன்? போகப்போகிறேன். உனக்கு என்ன வேண்டும்?” என்று வினவினார். நாயர்,

“நீர் எனக்கு ஒரு கார்யம் செய்யவேண்டும். நான் இக் கடிதத்தை வேறு ஒரு கவரில் வைத்து, மேல்விலாஸம் எழுதிக்கொடுக்கிறேன். நீர் அதை நாளைக்கு சிதம்பரத்தில் ஒரு தபாற்பெட்டியில் போட்டுவிடவேண்டும்.” என்று கேட்டுக்கொள்ளவே, கிருஷ்ணய்யர் தான் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டார்.

* * * * *

அதே இரவு சுமார் 8 மணி இருக்கும்.

அச்சமயம் பம்பாயின் (மாடுங்கா என்று கூறப்படும்) ஒரு பாகத்திலுள்ள ஒரு அழகிய தோட்டத்தில், மிகவும் அடர்ந்து வளர்ந்திருந்த சில புஷ்பச்செடிகளின் மறைவில், ஒருவன் உட்கார்ந்துகொண்டு சமீபத்தில் இருவர் தமிழில் சம்பாஷித்துக்கொண்டிருந்ததை மிகவும் ஆவலுடன் கவனித்துக்கொண்டிருந்தான். அச் சம்பாஷணை கீழ்க்கண்டவாறு:—

ஒருவன்:—ஜயராமா! இன்று எனக்கு சாம்பமூர்த்தியிடமிருந்து கடிதம் வந்தது. அவனுக்கு இந்த வெள்ளிக்கிழமை உப்பளியப்பன் கோயிலில் கல்யாணமாம்.

ஜயராமன்:—என்ன? கல்யாணமா? அட பாபமே! பெண் யார்? ஏண்டா கிட்டு! இந்த ஸ்திதியில் அவன் விவாஹம் செய்துகொள்ளலாமா?

கிட்டு :—பெண்ணின் பெயர் ஸரஸ்வதியாம். மிகவும் அழகாயிருக்கிறாளாம். அவள் பிறந்து வளர்ந்த ஊர் வஸந்தபுரியாம். வாஸ்தவம்; அவன் விவாஹம் செய்து கொள்வது பிசகுதான். ஆனால் அதற்கு நாம் என்ன செய்யலாம்?

ஜயராமன் :—வாஸ்தவம். நாம் ஒன்றும் செய்வதிற்கில்லை. அவன் நம்மை நம்பியிருக்கும்பொழுது நாம் அவனைக் காட்டிக்கொடுப்பது மிகவும் பிசகு. அடாடா! என்ன அநியாயம்? ஆமாம்; கிட்டு! அவனுக்கு எவ்வளவு தைர்யம் பார்த்தாயோ? அடேயப்பா! அவன் ஸ்திதியில் நான் இருந்தால் இதற்குள் தற்கொலை செய்துகொண்டிருப்பேன்.

அத்தியாயம். 10.

வியாழக்கிழமை மாலை சுமார் 6 மணி இருக்கும்.

அச்சமயம் வஸந்தபுரி சந்நிதித் தெருவில் கங்காதரனுடைய தாயார் தன் கார்யஸ்தர் ராமானுஜய்யங்காருடன் பேசிக்கொண்டிருந்தாள். அவள்,

"ஆனால் நீர் எல்லா நெல்லையும் விற்றுவிட்டீரோ?" என்று வினவ, ராமானுஜய்யங்கார்,

"விற்றுவிட்டேன். ஏனென்றால் சீக்கிரம் விலை இறங்கிவிடும்போலிருக்கிறது." என்று விடையளித்தார். அம்மாது,

"சரி. இப்பொழுது பணம் உம்மிடம் எவ்வளவு இருக்கிறது?" என்று வினவ, ராமானுஜய்யங்கார்,

"என்னிடம் 12350 ரூ. இருக்கிறது. நாளை தினம் பாங்கியில் போட்டுவிடலாமென்று இருக்கிறேன்." என்றார். அம்மாது,

"அப்படியே செய்யும். பணத்தை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ளும். அதை என்ன உம்முடைய வீட்டில்

தானே வைத்திருக்கிறீர்?" என்று வினவ, ராமானுஜ அய்யங்கார்,

"ஆமாம். வேண்டுமானால் கொண்டுவந்து—" என்று அவர் மேலே பேசுமுன், அம்மாது,

"வேண்டாம். உம்மிடமே இருக்கட்டும்." என்றாள். அச்சமயம், அவ் வீட்டின் வேலைக்காரன் ஒருவன் அங்கு வந்து,

"அம்மா! டாக்டர் ஐயா வந்திருக்கிறார்." என்று கூறவே, கங்காதரனுடைய தாயார், வியப்புற்று,

"யார்? கோபாலய்யரா?" என்று வினவியவண்ணம் எழுந்து முன்கட்டிற்குச் சென்றாள். அங்கு ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்த கோபாலய்யர், அவளைக் கண்டதும் மரியாதையுடன் எழுந்து நின்று, நமஸ்கரித்துவிட்டு,

"அம்மா! எனக்கு உங்களுடன் கொஞ்சம் தனிமையில் பேசவேண்டும்." என்று கூறவே, அம்மாது, மேலும் வியப்புற்று,

"அப்படியா? சரி; ராமானுஜய்யங்காரே!—" என்று மேலே பேசுமுன், கோபாலய்யர்,

"அடாடா! மறந்துபோய்விட்டேன். அவரும் இருக்கவேண்டியது மிகவும் அவசியம்." என்றார்.

உடனே, கங்காதரனுடைய தாயார், கோபாலய்யரையும் ராமானுஜய்யங்காரையும் அழைத்துக்கொண்டு, பக்கத்திலிருந்த ஒரு அறைக்குச் சென்றாள். பிறகு அவ்விருவரும் உட்கார்ந்துகொண்டதும், தானும் அமர்ந்துகொண்டு, அடக்க இயலாத ஆவலுடன், டாக்டரை நோக்கி,

"என்ன விசேஷம்? உங்களைப் பார்த்தால் ஏதோ மிகவும் முக்கியமான சமாசாரம் சொல்லப்போகிறவர் போல் இருக்கிறதே." என்று கூறவே, கோபாலய்யர்,

"நான் சொல்லப்போகும் விஷயம் மிகவும் முக்கியம் தான். இன்னும் இதை நான் கோபாலன் இறந்த மறு

தினமே உங்களிடம் சொல்லியிருக்கவேண்டும். ஆனால் அது முடியாமற்போய்விட்டது. ஏனென்றால் நான் சொல்லப்போகும் விஷயம் வாஸ்தவமென்று ரூபிக்கும்பொருட்டு கோபாலன் என்னிடம் கொடுத்த ஒரு கடிதம் அவன் இறந்த அதே இரவு காணாமற்போய்விட்டது. பிறகு அது இன்றுதான் மறுபடியும் வியக்கத்தக்கவிதம் என் வசம் கிட்டியது. சரி; அதிருக்கட்டும். கோபாலன் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்குமுன் அவன் என்னிடம் ஒரு இரஹஸ்யத்தைச் சொல்லி, அதைத் தான் இறந்தபிறகு நான் உங்களிடம் வெளியிடவேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொண்டான். அவன் சொன்ன விஷயம் நம்பத்தக்கதாயில்லாததால், அதை அவன் ஒரு கடித ரூபமாக எழுதிக் கொடுக்கவேண்டுமென்று நான் கூறவே, அவன் அப்படியே செய்தான். அவன் சுயநினைவுடனிருக்கும்பொழுது அக் கடிதத்தை எழுதினானென்பதை ரூபிக்க, அதில் நானும் சாக்ஷிக் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். அம்மா! ஸரஸ்வதியின் தமயன் குருஸ்வாமியை அடித்துக் கொன்றது உங்களுடைய முதல் பிள்ளை கோபாலனேயொழிய கங்காதரன் அல்ல," என்று கூறவே, கங்காதரனுடைய தாயார்,

"என்ன? என்ன சொன்னீர்?" என்று கூவினாள். மறுவிநாடி தன் செவிகளையே நம்பாதவள்போல் பிரமித்து, தன் வாயைத் திறந்து பேசவும் சக்தியின்றி, கோபாலய்யரை உற்றுநோக்கினாள். ராமானுஜய்யங்கார், திகைப்புற்று, கண்ணைக் கொட்டாமல், கோபாலய்யரையும் அம்மாளையும் மாறிமாறி நோக்கியவண்ணமிருந்தார். கடைசியில், கங்காதரனுடைய தாயார், பெருமூச்செறிந்தவண்ணம்,

"கோபாலய்யரே! நீர் சொல்வதை என்னால் நம்ப முடியவில்லையே," என்றாள். கோபாலய்யர்,

"வாஸ்தவம். இதை நான் சொன்னால், பிறர் நம்பமாட்டார்களென்பதை எதிர்பார்த்தே, இவ்விதம் கோபாலனை நான் அதைக் கடிதரூபமாக எழுதிக்கொடுக்கச் சொன்னேன். இதோ அக் கடிதம் இருக்கிறது." என்று கூறியவண்ணம், கோவிந்த நாயர் அனுப்பிய அக் கடிதத்தை

எடுத்துத் தரையில் வைத்தார். கங்காதரனுடைய தாயார், தன் காரியஸ்தரை நோக்கி,

"ராமானுஜய்யங்காரே! அதை வாசியும்." என்று கூறவே, ராமானுஜய்யங்கார், நடுங்கும் தன் வலதுகரத்தால் அதை எடுத்துப் பிரித்து, தடுமாற்றத்துடன் கீழ்க்கண்டவாறு வாசித்தார்:—

"அம்மா! இனி நான் பிழைக்கமாட்டேனென்று எனக்கே தோன்றுவதால், நான் உயிருடனிருக்கும்பொழுது உன்னிடம் சொல்லத்துணியாத நான் செய்த ஒரு குற்றத்தை இக் கடிதத்தில் ஒப்புக்கொள்ளுகிறேன். அன்று குருஸ்வாமியை அடித்துக் கொன்றது நானேயொழிய கங்காதரன் அல்ல. அவனுக்கும் எனக்கும் என்ன மனஸ்தாபமென்று நீ ஆச்சரியப்படுவாயென்பது நிச்சயம். அதற்குக் காரணம் இதுவே. அன்று மாலை சுமார் $6\frac{1}{4}$ மணிக்கு நான் இவ்வூர் ரயில்வே ஸ்டேஷனில் இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். அச்சமயம் குருஸ்வாமி அவ்வறையின் வெளிப்பக்கத்தில்நின்றுகொண்டு தன் தோழன் ஒருவனுடன் பேசிக்கொண்டிருந்தான். அதில் அவன் அன்று மத்தியானம் தான் கங்காதரனைத் திட்டி அவமானப்படுத்தியதாகச் சொன்னதுமன்றி, நம் குடும்பத்தைப் பற்றியே மிகவும் ஏளனமாகப் பேசவாரம்பித்தான். நான் ஒரு பைத்தியமென்றும், என் தந்தை ஒரு மோசக்காரனென்றும், எல்லாம்போக, என்னைப் பெற்று வளர்த்த நீ ஒரு விபசாரியென்றும் அவன் கூறவே, அவனைத் தண்டிக்காமல் விடுவதில்லையென்று உடனே சபதம் செய்துகொண்டேன். ஆனால் பலர் கூடியிருக்கும் அவ்விடத்தில் நான் அவனுடன் சண்டையிடுவது பிசகென்று நினைத்து, சற்றுநேரத்திற்கெல்லாம் அவன் தன் தாயாரை ரயிலில் உட்காரவைத்துவிட்டு வெளியே செல்லவே, நானும் அவனைப் பின்பற்றிச் சென்றேன். அவன் சுமார் 7 மணிக்குத் தன் வீட்டிற்குள் நுழைந்தபொழுது, அவ் வீட்டின் கூடத்தில் வேலைக்காரி ஒருவள் (நாகு) உட்கார்ந்துகொண்டிருந்தாள். குருஸ்வாமி தன் தங்கை எங்கே

யென்று அவளைக் கேட்க, அவ் வேலைக்காரி அவள் (ஸரஸ்வதி) பக்கத்துவீட்டிற்குப் போயிருப்பதாகக் கூறவே, அவளை வீட்டிற்குப் போகச் சொல்லிவிட்டுத் திரும்பியவன், என்னைப் பார்த்ததும் சிறிதும் மரியாதையின்றி 'வெளியில் போ' என்று ஆக்ஞாபித்தான். ஆனால் அதை நான் கவனிக்காமல், அவன் அவ்விதம் ரயில்வே ஸ்டேஷனில் பேசியதற்குக் காரணமென்ன என்று கேட்க, அவன் தான் செய்த குற்றத்தைச் சிறிதும் உணராமல், மறுபடியும் நம்முடைய குடும்பத்தைப் பற்றி கண்டபடி பேசவாரம்பிக்கவே, கோபத்தின் மிகுதியால் ஓங்கி அவனுடைய வாயில் ஒரு குத்து வைத்தேன், அச்சமயம், அவன் பக்கத்திலிருந்த மித்தத்தின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தானாகையால், என் அடியின் அதிர்ச்சியால், அப்படியே பின்பக்கம் விழ, அவனுடைய மண்டை அம் மித்தத்தில் கிடந்த ஒரு அம்மியில் வேகத்துடன் அடிபட்டது, அவன் உடனே இறந்துவிட்டான். இதைக் கண்டதும், நான் ஒன்றும் புரியாமல் திகைப்புற்று, மனம் பதற, சரீரம் நடுங்க, நின்றுகொண்டிருக்கையில், அவ் வீட்டிற்குள் நுழைந்த கங்காதரன், நடந்த விஷயத்தை அறிந்ததும், நான் அவ்விதம் குருஸ்வாமியை அடித்ததற்கும், அதனால் அவன் இறந்ததற்கும், தானே காரணமாகையால், நான் செய்த கார்யத்தின் பலனாய் வரக்கூடிய அவமானத்தையும் கஷ்டத்தையும் தானே அனுபவிக்க கடமைப்பட்டவனென்று கூறினான். அம்மா! சுபாவத்திலேயே எனக்கு பயம் அதிகமென்பது உனக்குத் தெரியும். அதுவுமன்றி, அப்பொழுது கங்காதரனும் எப்படியாவது தப்பித்துக்கொண்டுவிடுவானென்று நான் நம்பினேன். ஆகவே, அவன் என்னை அவ் வீட்டின் கொல்லைப் பக்கமாய்ப் போய்விடுமாறு கூறவே, அந்தோ! மகாபாபியாகிய நான் என் அருமைத் தம்பியை எத்தகைய ஆபத்தில் விட்டுவிட்டு வருகிறேனென்பதை சிறிதும் உணர மதியற்று ஓடிவந்துவிட்டேன், பிறகு நடந்ததை நான் எழுத வேண்டியது அனாவசியம். அம்மா! அப்பொழுது எப்படியாவது நாம் தப்பித்துக்கொண்டால் போதுமென்று எனக்குத் தோன்றியபோதிலும், கங்காதரன், என்பொருட்டு,

இரங்கசந்திரா

அல்லது

மாயமாய் மறைந்த வைரம்.

'மோகனமணி', 'இரட்டைக்கொலைமர்மம்', 'பழிக்குப்பழி', 'சுலோசனை', 'மோகனவல்லி', 'நோய்தீர்ந்தமாயம்', 'இராஜசுந்தரன்' முதலியவற்றின் ஆசிரியரும் பல தமிழ்ப் பத்திரிகைகளில் விசேஷக் கட்டுரைகள் எழுதிவருபவருமான, கிரந்தகர்த்தா,

கடலூர், வே. ராமச்சந்திரன் எழுதியது.

வழக்கம்போல் வெளியே உலவியபின் தனது 'லக்ஷ்மி விலாஸ்'த்தையடைந்த நமது துப்பறியும் ஜயஸிங், வெளியே நின்றிருந்த மிகவும் உயர்ந்த மோட்டார் வண்டியைக் கண்டு அதிசயித்து நின்றான். வெள்ளி சித்திரவேலைகளும், வெல்வெட் பட்டு மெத்தைகளும், இன்னும் மற்ற அழகிய அலங்காரங்களுடனும் கூடி சிறந்து, அதன் மேன்மையை பின்னும் அதிகப்படுத்தின. அதை ஓட்டுபவனும் மிகவும் கம்பீரமாக முன்னே உட்கார்ந்திருந்தான். "படாடோப ஆடம்பரத்தையே விரும்பும் ஓர் பெரும் செல்வந்தரது உபயோகத்திற்காகச் செய்யப்பட்டதாக இருக்கலாம். அநேகமாய் கோபாலபுரம் ஜமீன்தாருடையதாக இருக்க வேண்டும். அவர் என்னைத் தேடிவரவேண்டிய காரியம் யாதாயிருக்கும்? ஆம்; அவருடைய குமாரனைப்பற்றிய விஷயமாயிருக்கவேண்டும்." என்று நினைத்துக்கொண்டே மேன்மாடியை அடைந்தான். அப்பொழுது ஸ்ரீநிவாஸன், எதிரில் தோன்றி, அச்சடித்த ஓர் சிறு துண்டு கடிதத்தை ஜயஸிங்கிடம் அளித்தான். அதில் 'கமலசேகரம் பிள்ளை, கோபாலபுரம் ஜமீன்தார்' எனக் காணப்பட்டது. சிறிது நேரத்தில், ஜயஸிங், ஸ்ரீநிவாஸனுடன், கமலசேகரர் உட்கார்ந்திருந்த அறையை யடைந்தான். கமலசேகரர் சுமார் ஐம்பது வயதடைந்தவரானாலும், மிகவும் திடமாகக் காணப்பட்டார். அவரது தோற்றம் மிக்க கம்பீரமாயிருந்தது.

ஆயினும் 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்றவாறு அவரது மனதில் அதிக சஞ்சலம் குடிகொண்டிருந்ததை அவரது முகம் உற்றுநோக்குவார்க்குத் தெளிவாக எடுத்துக் காட்டியது. இவை யாவற்றையும் ஜயஸிங் வெகு சீக்கிரத்தில் அறிந்துகொண்டு 'தென்னிந்தியாவில் மிகவும் பெரிய ஜமீனான கோபாலபுரம் தங்களுக்குரியதென நினைக்கிறேன். தங்கள் மனைவி இறந்து சுமார் பத்துவருடங்களாகின்றன. தங்களுக்கு சுமார் இருபத்தைந்து வயதுள்ள ஒரு குமாரனுண்டு. இவையெல்லாம் சரிதானே ?' என்றான்.

ஜமீன்தார், ஆச்சரியத்தினால் பிரமித்து, 'தங்களுக்கு முன்பின் தெரியாத ஒருவருடைய விஷயங்களைப் பற்றி இவ்வளவு தெளிவாகக் கூறுவது மிக்க ஆச்சரியமாயிருக்கிறது.' என்றார்.

ஜயஸிங் 'தாங்கள் என்னைப்பற்றி அறிந்திருக்கநியாயமில்லையாயினும், என்னுடைய தொழில்முறையில், எனக்கு இவையெல்லாம் தெரியவேண்டியது அத்யாவசியமாகும். அதிலும் தங்கள் மோட்டார்வண்டிக்கு இணையானது இப்பக்கத்தில் வேறெதுவுமில்லை. அதிருக்கட்டும். தாங்கள் என்னை நாடிவந்த காரணம் யாது? தங்கள் குமாரனைப் பற்றிய அற்பவிஷயமாயிருக்காதென்று நினைக்கிறேன். எனக்கு வேலை அதிகமிருக்கிறது. சீக்கிரம் தாமதியாது விஷயத்தைக் கூறி என்னை தெளிவுபடுத்துங்கள்.' என்றான்.

இதைக் கேட்டவுடன் கமலசேகரரது முகம் வருத்தத்தினால் சிறிது மாறுபட்டது. தமது மனத்தை சிறிது திடப்படுத்திக்கொண்டு, 'நான் இப்பொழுது தங்களிடம் பேசவந்தது என் குமாரனைப்பற்றியதேயாகும். ஆனால் தாங்கள் கூறுவதுபோல் விஷயம் அற்பமானதல்ல. அவனுடைய நடத்தையில் எனக்கு மிக்க சந்தேகமேற்பட்டிருக்கிறது. நான் கவலைப்படுவதெல்லாம் அவனைப்பற்றியே. சென்ற ஒரு வருடத்திற்குள் அவன் பலமுறை மறைந்து, ஒவ்வொரு சமயங்களில் தொடர்ந்து இரண்டு மூன்று

மாதங்கள்கூட காணப்படுவதில்லை. அதைப்பற்றிக் கேட்டால் அவன் சரியான பதில் ஒன்றும் சொல்வதில்லை.' என்றார்.

இதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த ஜயஸிங் பெருமூச்சுவிட்டான். பின்னர் அவன், 'தாங்கள் ஏதோ வீண் கதைகளைக் கூறி, என் காலத்தை வீணாக்குகிறீர்கள். அதிகப்பிரஸங்கியான தங்கள் குமாரனைப்பற்றிய விஷயங்களில் எனக்குத் தலையிட இப்பொழுது விருப்பமில்லை. தானே கெட்டழிந்து நல்வழிப்படட்டுமென்று தாங்கள் கைகழுவிவிடுங்கள். தாங்களோ அவன் செலவுக்கு மாதமொன்றுக்கு 100 ரூபாய் கொடுக்கிறீர்கள். ஆனால் அவன் அதைப்போன்று பத்துமடங்குக்கு அதிகமாக செலவழிக்கிறான். இது மிக்க ஆச்சரியமாயிருக்கிறது.' என்றான்.

கமலசேகரர் :—ஆனால் ஜயஸிங்! சென்ற ஒருவருடமாக அவன் நடத்தையில் மிக்க மாறுதலேற்பட்டிருக்கிறது. பிரதிதினமும் நோட்டுநோட்டாக செலவழிக்கிறான். குதிரைப் பந்தயங்களில் அவன் அதிகப் பணம் ஜெயிப்பதாக அவன் நண்பர்கள் கூறுகின்றனர். ஆயினும் அவன் நடத்தை மிக்க மர்மமாயிருப்பதால், அதிலுள்ள ரகசியத்தைக் கண்டுபிடித்தே தீரவேண்டும் என நான் தீர்மானித்துள்ளேன். வீண் ஆர்ப்பாட்டம் செய்யும் போலீசாரிடம் போக எனக்கு விருப்பமில்லை. ஆதலினால், நான் உமது உதவியை நாடிவந்தேன். நீர் கேட்பதை நான் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்.

ஜயஸிங் :—ஒவ்வொருதினமும் அதிகப் பணம் செலவழித்தல், குதிரைப் பந்தயங்களில் ஏராளமாக ஜெயித்தல்—இவை பெரும் பொய். குதிரைப் பந்தயங்களெல்லாம் வெறும் மோசம். கமலசேகரருடைய குமாரன் விஜயரங்கம் என்றால், எந்த குதிரைப் பந்தய சாலைகளிலும் சேர்க்கமாட்டார்கள். ஏதாவதொரு தந்திரம் செய்து ஏமாற்றி பணம் ஜெயித்துவிடுவான். ஆகையால், விஜயரங்கம் ஜெயிக்கக் கூடிய பந்தயமே

இல்லை. தாங்கள் என்னிடமிருந்து என்ன அறிய விரும்புகிறீர்கள்?

கமலசேகரர் :—விஜயரங்கம் காணாமல் மறைந்துவிடும் சமயங்களில் அவன் என்ன செய்கிறான் என்பதை ரகசியமாய் அறியவேண்டும்.

ஜயஸிங் :—அப்படியாயின் விஜயரங்கம் இப்பொழுது மறைந்திருக்கிறானா?

கமலசேகரர் :—ஆம்.

ஜயஸிங் :—கடைசியாக தாங்கள் எப்பொழுது அவனைப் பார்த்தீர்கள்?

கமலசேகரர் :—சரியாக ஒருமாதத்திற்குமுன். பலமுறை அவன் பொழுதுபோக்கும் நகரின் கோடியிலுள்ள சபைக்கு டெலிபோன் மூலம் கூப்பிட்டுக் கேட்டும் யாதொரு பதிலும் கிடைக்கவில்லை.

ஜயஸிங் :—ஓ! நகரத்தின் கடைசியிலுள்ள அந்த உயர்ந்த நிலைமையடைந்த கட்டிடமா? பெருங் கொள்ளைக்காரர்களும், வஞ்சகர்களும், சூதாடுபவர்களும் கூடியிருக்கும் அந்த வீடா? ஆயினும் விஜயரங்கம் பணத்தை ஏராளமாக செலவிடுகிறான் எனத் தாங்கள் கூறுகிறீர்கள்.

கமலசேகரர் :—ஆம். அடிக்கடி பந்தயங்களில் பழகுவதால், மிக்க அநுபவத்தினால், தான் ஜெயிப்பதாகக் கூறுகிறான். ஆனால், தன் செய்கையின் பலனை அறிந்து முடிவில் அவனே திருந்திவிடுவான் என நினைக்கிறேன். அநேகமாய் வாலிபர்களுக்கு அவர்களுடைய யௌவனத்தால் பலவிதம் முறைதவறி நடக்கிறார்கள். ஆயினும் அவன் திருந்திவிடும்பக்ஷத்தில் நான் அவனை மன்னித்துவிடுவேன்.

ஜயஸிங் :—விஜயரங்கம் திரும்பி வரும்வரையில் நான் ஒன்றும் செய்வதற்கில்லை. அவன் வந்தவிஷயம் தெரிந்தவுடன், நான் அவனைக் கவனித்துக்கொள்ளுகிறேன். அடிக்கடி அவன் இம்மாதிரி மறைந்துவிடுவதானது

பெரும்பாலும் ஒருபெண்ணின் விஷயமாகவே இருக்கவேண்டும். அதுவே அவனிடம் ஏற்பட்டுள்ள மாறுதல். இப்பொழுது நான் அந்த ஸ்திரீயைக் கண்டுபிடிக்கவேண்டும்.

கமலசேகரர் :—நானும் அதைத்தான் நினைத்திருந்தேன்.

ஜயஸிங் :—நான் விஜயரங்கத்தைப் பார்த்ததில்லை. சில அடையாளங்கள் சொன்னால் குறித்துக்கொள்ளுகிறேன். அன்றி அவன் உருவப்படம் அனுப்பினும் சரியே.

கமலசேகரர் :—உயரம் சுமார் ஐந்தடி ஆறங்குலம். மாநிறம். சிறியமீசை. கத்தரித்துவிட்ட மயிர்.

ஜயஸிங் :—வேறு முக்கிய அடையாளம் ஏதேனுமுண்டோ?

கமலசேகரர் :—ஆம். அவன் ஐந்துவயதுள்ள சிறுவனாயிருக்கையில், கண்வலியினால் வலதுகண் பார்வை கெட்டுவிட்டது. அவன் அதற்காக கண்ணாடியால் செய்யப்பட்ட ஒரு செயற்கைக் கண் வைத்திருக்கிறான். யாராலும் அதைக் கண்டுபிடிக்கமுடியாது. ஏனெனில், அவன் எப்பொழுதும் பச்சைநிறமுள்ள மூக்குக் கண்ணாடிகளை அணிந்திருப்பான்.

ஜயஸிங் :—ஆம். இது ஒரு மிகவும்முக்கியமான விஷயமே. அவன் வந்ததும் எனக்குத் தெரிவிக்கவும். ஒரு புகைப் படமும் அனுப்பின் நலம்.

கமலசேகரர் விடைபெற்றுக்கொண்டு மோட்டாரிலேறி தமதிடமடைந்தார். ஜயஸிங் ஆழ்ந்த ஆலோசனையிலாழ்ந்திருந்தான்.

சிறிது நேரம் கழித்து, போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் பீப்பாய்துரை (Mr. Cask) தடதடவென்று வெகு அவசரமாக ஜயஸிங் உட்கார்ந்திருந்த அறையினுள் நுழைந்து "இப்பொழுது உனக்கு ஒழிந்த நேரந்தானே? சற்றுமுன் இங்கே வந்துவிட்டுப்போனது கோபால்புரம் ஜமீன்தார் கமலசேகரம்பிள்ளை தானே? நான் அவருடைய

மோட்டார்வண்டி இங்கிருந்து திரும்பிச் செல்வதைக் கண்டேன். அவசரவேலைகள் ஒன்றும் உனக்கில்லையே ?'' என்றார்.

"எப்பொழுதும் எனக்கு அவசர வேலைகளுண்டு. ஆனால் நான் மிக முக்கியமானதைத்தான் முதலில் கவனிப்பேன்.'' என்றான் ஜயஸிங். போலீஸ் இன்ஸ்பெக்டர்,

"என்னுடைய நிலைமை மிக்க சங்கடமாயிருக்கிறது. ஒரு பெரிய விஷக்கொலையைக் கண்டுபிடிக்கவேண்டும். அதில் ஒரு பெரிய ரஸாயன சாஸ்திர நிபுணர் தலையிட்டிருக்கவேண்டும். அதனால் மூன்று மரணங்கள் நேரிட்டிருக்கின்றன. இப்பொழுது இவ்வளவும்தவிர நான் வைரங்களையே கொள்ளையடிப்பதே தொழிலாகக்கொண்ட ஒரு கூட்டத்தாரைக் கண்டுபிடிக்கவேண்டிய தொல்லை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் மிக்க சாமர்த்தியமாகக் கொள்ளை நடத்திவருகின்றனர். நமக்கு எள்ளளவும் உளவு கிடைக்கவில்லை. பாழும் இந்தப் போலீஸில் வேலை பார்ப்பதைப் போன்ற தொல்லை வேறில்லை.'' என்று கூறி பெருமூச்சு விட்டார்.

இவருடைய பதைபதைப்பையும், துன்பத்தையும் கண்ட ஜயஸிங் தனக்குள் சிறித்துக்கொண்டான். பிறகு அவன், 'தயவுசெய்து அந்த வைரக்கொள்ளையைப்பற்றி விவரமாகக் கூறும்,' என்றான். போலீஸ் இன்ஸ்பெக்டர்,

"அதைப்பற்றி ஒன்றும் அதிகம் கூறுவதற்கில்லை. இந்த உலகத்திலுள்ள முக்கியமான உயர்ந்த வைரங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக எவ்விதமோ தந்திரமாக களவாடப்பட்டு எப்படியோ இந்தியாவுக்கு வந்துசேருகின்றன என்பது பெரும் மர்மம். கடைசியாக இப்பொழுது ஒரு லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள 'பாரிஜாதம்' என்ற பெயருள்ள வைரம் களவாடப்பட்டிருக்கின்றது. அதற்காக இப்பொழுது இந்தியாவுக்கு வரும் கப்பல்களையெல்லாம் சோதிக்கவேண்டும். வெளி தேசங்களிலிருந்து வரும் தபால்களையெல்லாம் சோதித்தாய்விட்டது. சந்தேகிக்கப்பட்டுள்ள

ஒவ்வொரு பழைய திரு[illegible]னையும் ஜாக்கிரதையாக கவனிக்கப்பட்டுவருகிறது. உன்னு[illegible]இருக்குமாகில் நான் இப்பொழுது துணிந்து வேலை செய்வேன்.'' என்றார்.

ஜயஸிங்,

"அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். எப்பொழுதும் நான் தங்களுக்கு உதவிசெய்யத் தயாராய் இருக்கிறேன்.'' என்றான். இன்ஸ்பெக்டர் பீப்பாய்துரை,

'போலீஸார் சந்தேகங்கொண்டு விஜயரங்கத்தைத் தேடினர். ஆனால் அவன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கக்கூடவில்லை. இந்தப் பெரும் வைரக்களவினால், போலீஸாருக்கு ஒருபெரும் கெட்ட பெயர் ஏற்பட்டிருந்தது. ஒரு வருடகாலமாக, யாராவது ஒரு செல்வந்தரிடமிருந்து, முத்து, வைரம், மரகதம், இரத்தினம் முதலிய ஏதாவதொன்று களவாடப்பட்டது என்ற செய்தியே போலீசுக்கு எட்டியபடியிருந்தது. திருடப்பட்டவையெல்லாம் மிகவும் உயர்ந்த விலையேறப்பெற்ற வஸ்துக்களாகும். யார் இவற்றைச் செய்ய மூலகாரணமாயிருக்கின்றனர் என்பது இன்னும் மர்மமாயிருக்கிறது. எத்தகைய துப்பறிவோராலும் இதைக் கண்டுபிடிக்கக்கூடவில்லை. முதலில் இதைப்பற்றி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் கவனம் செலுத்தவில்லை. கடைசியாக, இரங்கூனிலிருந்து களவாடப்பட்ட ஒரு மரகதம் சென்னையில் விலை கூறப்படுகிறது என்பதை அறிந்ததும், மிக்க வியப்புடன் ஜாக்கிரதையாயிருந்தனர். கடைசியாக முற் கூறப்பட்ட 'பாரிஜாதம்' என்ற வைரமானது சிங்கப்பூரில் பிரபல வியாபாரியும், லக்ஷாதிபதியுமான, அ. ல. பெ. ள. சோமசுந்தரம் செட்டியாரிடமிருந்து திருடப்பட்டது. அதுமிகவும் பிரஸித்திபெற்றபுராதன விலையுயர்ந்த வைரம். அன்றையதினம், சோமசுந்திரம் செட்டியார் வீட்டில் அவருக்கு திவான்பஹதூர் பட்டம் கிடைத்ததற்காக, ஒரு விருந்து நடத்த ஏற்பாடாயிருந்தது. அன்று பலர் வந்து அவருடைய வீட்டில் கூடியிருந்தனர். எப்படியோ மாறுசாவியின் உதவியால் அவருடைய இரும்புப்பெட்டி திறக்கப்பட்டிருக்கிறது. அன்றையதினம் ஒரு தென்னாட்டானைப்

188779
8
601 008

போல் [illegible] எல்லோரும் சுற்றுப்புறங்களில் திரியும் [illegible] கவனித்ததாகச் சொல்லுகிறார்கள். அவனுடைய உருவ அடையாளங்களைக் கவனிக்குமிடத்து அவனைப்போல் பலர் இருக்கலாம் என்று தெரிகின்றது. நடுத்தர உயரம், வயது சுமார் ஐம்பது, கட்டையான பழுப்பு நிறமான மீசை, திடசரீரம், சிவந்த நிறம். பிரயாணிகளுடைய ஜாப்தாவில் அவன் பெயர் வீரநாதன் எனக் காணப்படுகின்றது. இப்பொழுது அவன் வரும் கப்பல், 'இராஜுலா' என்ற கப்பல், சனிக்கிழமை சென்னை வந்துசேருகின்றது. இதுதான் இதுவரை கிடைத்துள்ள சமாசாரம். ஏனெனில் நேற்றுமுதல்தான் வீரநாதன் சந்தேகிக்கப்பட்டு ஆட்கள் அவனைக் கவனித்துவருகின்றனர். (போலீஸ் இன்ஸ்பெக்டர் அக்கப்பலில் வரும் பிரயாணிகளுடைய பெயர்களடங்கிய ஒரு ஜாப்தாவை ஜயஸிங்கிடம் அளித்தார்.) இந்த விஷயங்களெல்லாம், சாதாரணமாய், ஒரு கப்பல் ஒரு துறைமுகத்தை விட்டவுடன், அது போய்ச்சேரும் இடத்திற்கு, கம்பியில்லாத் தந்தி மூலம் ரகசிய பாஷையில் அறிவிக்கப்படும். (அப்பறியும் ஜயஸிங் குறிப்பாக முதல், இரண்டாவது வகுப்பு பிரயாணிகளின்பெயர்களைப் பார்த்துக்கொண்டேவந்தான். அவை அதிகமாகக் காணப்படவில்லை. அதில் வீரநாதன் என்ற பெயர் சிகப்பு மையினால் குறிப்பிடப்பட்டிருந்தது.) இந்த ஸ்வரக்களவை நடத்துபவர்கள் யாதொருவிதமான உளவையும் விட்டுப்போவதில்லை. அதனாலேதான் அதிக குழப்பம் உண்டாகிறது. ஆயினும் இந்த விஷயத்தை நான் உன்னிடம் ஒப்படைத்துவிட்டபடியால், எனக்கு இனி கவலையில்லை." எனக்கூறி, திருப்தியடைந்தார். ஜயஸிங்,

"தாங்கள் இவ்வளவு தந்திரமாகப் பேச எங்கே கற்றுக்கொண்டீர்களென்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. 'இராஜுலா' துறைமுகம் வந்துசேருவதற்குள் தாங்கள் என்னை அங்கே காணலாம். அதற்குள் நான் இதைப்பற்றி தீர ஆலோசிக்கவேண்டும். இன்னும் இரண்டு நாட்கள்தானிருக்கின்றன." என்றான்.

"பால வித்யா"

1931வரு மார்ச்சுமீ பஞ்சாங்கம்.

தேதி	த.மீ	வார.	திதி, நக்ஷத்திரம், தியாஜ்ஜியம், யோகம் முதலியன.
1	௧௮	ஞாயி	துவா ௪௩-௧௭, புன ௮-௨௫, தி ௨௭-௨௨, சி.
2	௧௯	திங்	திர ௩௮-௨, பூச ௫-௧௪, ரா ௫-௪௯, பிரதோஷம், சி.
3	௨0	செவ்	சது ௩௨-௨௪, ஆயி ௧-௩௯, [மக ௫௯-௧, ரா 0-௪, சி, [மாசிமக ஸ்ரீ நடராஜாபி.
4	௨௧	புத	○ ௨௯-௩௩, பூர ௫௩-௩0, [தி ௧௯-௧௫, அ
5	௨௨	வியா	பிர ௨0-௪0, உத்ர ௪௯-௨௭, [தி ௧0-௧௭, திதிதுவய, ம, சி
6	௨௩	வெ	துவி ௧௪ ௫௮, ஹஸ் ௪௫-௪௪, [தி ௯-௧0, அ, சி.
7	௨௪	சனி	திரு ௯-௧0, சித் ௪௨-௩௧, தி ௪-௪௧, ரா ௨௯-௮, ம, அ.
8	௨௫	ஞாயி	சது ௪-௫0, சுவா ௩௯-௫௫, ரா ௨௩-௪௧, சி, ம.
9	௨௬	திங்	பஞ் 0-௪௯, ஷஷ்ட் ௫௯-௫0, விசாக ௮-௧௧, ரா ௧௮-௧௪, [ம, சி.
10	௨௭	செவ்	ஸப் ௫௫-௪0, அனு ௩௭-௨௯, ரா ௨௧-௪௧, சி.
11	௨௮	புத	அஷ் ௫௪-௫0, கேட் ௩௭-௫௩, ரா ௨௮-௨௩, சி, ம.
12	௨௯	வியா	நவ ௫௫-௧௮, மூல ௩௯ ௩௨, சே ௧-௫௩, ரா ௯-௧, சி.
13	௩0	வெ	தெ ௫௭-௫, பூரா ௪௨-௨௭, தி ௪-௫0, சி.
14	௧	சனி	ஏகா ௫௯-௫௯, உத்ரா ௪௯-௩0, தி ௩-௫௨, ரா ௨௭-௩௨, [மீ-ரவி ௧௧-௩௭, சூ-திதி, சி.
15	௨	ஞாயி	துவா ௯0-0 திரு ௫௧-௩௫, சே 0-௫௮, வைஷ்-ஏகா அ ம
16	௩	திங்	துவா ௪-௪, அவி ௫௭-௨௪, தி ௨-௩௪, பிரதோஷம், சி.
17	௪	செவ்	திர ௮-௪௯, சத ௯0-0, தி ௧௭-௧௭, மாஸசிவ, ம.
18	௫	புத	சது ௧௩-௫௯, ●, சத ௩-௫0, தி ௨௧-௩௩, ஸர்வஅமா, சி,
19	பங்குனீ ௬	வியா	அமா ௧௯-௭, பூரட் ௧0-௧௯, ரா ௯-௪௮, அதிதி, சி. [அ.
20	௭	வெ	பிர ௨௩-௫௧, உத் ௧௭-௨௧, ரா ௧௯-௧௯, —, தெ-வரு, சி, அ.
21	௮	சனி	துவி ௨௭-௫௭, ரே ௨௧-௪௮, தி 0 0, மேஷ ரா ௨௧-௯, ம, சி,
22	௯	ஞாயி	திரு ௩0-௫0 அசு ௨௯-௧௭, தி ௧௫-௪, ரா ௨௧-௫௨, சி.
23	௧0	திங்	சது ௩௨ ௩௮ பர ௨௯-௩௮, தி ?-0, சது-விரு, சி, ம.
24	௧௧	செவ்	பஞ் ௩௩-௧௧, ☼ ௩௧-௪௧, தி 0-௨௭, கார்-௨ப, சி, அ.
25	௧௨	புத	ஷஷ்ட் ௩௨ ௨௯, ரோ ௩௨-௩௯, தி ௧௨-௧, ரா ௮௯-௪0, சி.
26	௧௩	வியா	ஸப் ௩0-௨௯, மிரு ௩௨-௨௨, ரா ௨௩-௬, ஸந்தானஸப், ம.
27	௧௪	வெ	அஷ் ௨௭-௨௭, திரு ௩0-௫௧, தி 0-0, சி.
28	௧௫	சனி	நவ ௨௩-௨௮, புன ௨௮-௪௩, தி 0-௪, ரா ௧௭-௪௧, [ஸ்ரீராமநவமி, சி.
29	௧௬	ஞாயி	தெ ௧௮-௪௪, பூச ௨௫-௪௩, ரா ௨௫-௪௫, திதிதுவ, சி.
30	௧௭	திங்	ஏகா ௧௩-௨௫, ஆயி ௨௨-௧0, ரா ௨0-௨, ஸர்வஏகா, சி, ம.
31	௧௮	செவ்	துவா ௭-௩௯, மக ௧௮-௨௨, ரா ௯-௩௫, பிரதோ, ம-திர, சி.

ரா			குரு
புத ரவி	8 மீன-புத 14 ,, ரவி 24 கு-சுக் 27 மே-பு		செ
சுக்			
சனி			கே

பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம்,
ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினாங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி
நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15 வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்தாலும்
ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய
சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் கடைசி தேதியில்
வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது
உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால்
நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்
திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறு
படியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதா
மணியார்டர் பண்ணிவிட்டால் இரு பாலர்க்கும் ஸௌகர்யம். வி. பி. யில்
அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமா
செலவாகிறது. சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாடுகளுக்கு
வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்ட
செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது
சந்தாதாராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழு
தும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர், ரிப்ளை
கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரை
களும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களு
பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவை
களை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே
அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப் பக்கம் ரூ 20. அரைப் பக்கம் ரூ 1
மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவு

பாலவித்யா ஆபீஸ்,

நெ. 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.

Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.